இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 26 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆவணி 18 – திங்கள்கிழமை 04 செப்டம்பர் 2023 – மதுரை 14 + 8 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 26: Thiruvalluvar Year - 2054 - Aavani 18 - Monday 04 September 2023 - Madurai 14+8 Pages ₹5.00

## வேலூரில் கழகத்தின் பவளவிழா...

# வெற்றிக்கு அச்சாரமிடும் முப்பெரும் விழா!





## உங்களில் ஒருவன்

**நம் உயிருடன் கலந்திருக்கும் தலைவர் கலைஞரின் அன்பு உடன்பிறப்புகளுக்கு, உங்களில் ஒருவன் எழுதும் கழகப் பவளவிழா – முப்பெரும் விழா அழைப்பு மடல்.**

கொட்டும் மழையில் சென்னை ராபின்சன் பூங்காவில் நடந்த பொதுக் கூட்டத்தில் திரண்டிருந்த ஆயிரமாயிரம் பொதுமக்கள் முன்பாக, “திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றிவிட்டது” என்று அறிவித்தார் பேரறிஞர் அண்ணா அவர்கள். 1949-இல் அவர் உருவாக்கிய இயக்கம், அண்ணாவின் கொள்கைத் தம்பிகளால் வளர்க்கப்பட்டு, அவரது தம்பிகளில் தலையாய தம்பியான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் அரை நூற்றாண்டுக்கு மேல் கட்டிக் காக்கப்பட்டு, இன்று உங்களில் ஒருவனான என் தலைமையில் வெற்றிகரமாக இயங்கிக் கொண்டிருக்கிற வேளையில், கழகம் தனது 75-ஆம் ஆண்டில் பெருமிதத்துடன் அடியெடுத்து வைக்கிறது.

**ஒரு மாநிலக் கட்சி முக்கால் நூற்றாண்டு காலம் தன் மக்களின் நலன் காக்க உறுதியாகப் போராடியும், இந்தியாவிலேயே முதன்முறையாக ஒரு மாநிலக் கட்சியால் அந்த மாநிலத்தில் மக்களின் பேராதரவுடன் வெற்றிபெற்று ஆட்சியைப் பிடிக்க முடியும் என்ற வரலாற்றுச் சாதனையை நிகழ்த்தியும், இந்தியாவுக்கே முன்னோடியான பல திட்டங்களை வகுத்தும், சட்டங்களை உருவாக்கியும் இன்று இந்தியாவை வழிநடத்தக்கூடிய வகையில் தனக்கென தனித்துவமான இடத்தைப் பெற்றும் திகழ்கிறது என்றால் அந்தப் பெருமை நம் உயிராகவும், உதிரமாக வும் திகழ்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்திற்கே உரியது. இந்த வரலாற்றுப் பெருமையில், உடன்பிறப்புகளாம் உங்கள் ஒவ்வொருவரின் பங்கும் அளப்பரியது.**

உங்களில் ஒருவனான நான் கழகத்தின் தலைவர் என்ற முறையிலும் தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்ற வகையிலும் மும்பையில் நடைபெற்ற ‘இந்தியா’ கூட்டணியின் மூன்றாவது ஆலோசனைக் கூட்டத்தில் ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட தலைவர்களால் வரவேற்கப்பட்டேன். ஜனநாயக விரோத – மக்கள் விரோத ஒன்றிய பா.ஜ.க அரசை யாரும் எதிர்த்து நிற்க முடியாது என்று இந்தியா கூட்டணியின் முதல் கூட்டத்தை பாட்னாவில் உருவாக்கியபோது ஏளனம் பேசினார்கள். ‘இது ஃபோட்டோ செஷன்’ என்று நகையாடினார் ஒன்றிய உள்துறை அமைச்சர். நகையாடியவர்களின் கண்களில் பயமாடுவதை பெங்களூரு நகரில் நடந்த இந்தியா கூட்டணியின் இரண்டாவது கூட்டத்தில் காண முடிந்தது. அதன் பிறகு, இந்தியா கூட்டணியின் மூன்றாவது கூட்டம் மும்பை மாநகரில் இரண்டு நாட்கள் நடைபெறும் என்றும் அதில் மேலும் பல கட்சிகள் இணையும் என்றும் அறிவிக்கப்பட்டபோது, பா.ஜ.க அரசின் பயத்தின் விளைவை சமையல் கேஸ் சிலிண்டர் விலைக் குறைப்பு நாடகம் அம்பலப்படுத்திவிட்டது.

> **சென்னை மண்ணடி பவளக்காரத் தெரு, 7-ஆம் எண் வீட்டில் ஆலோசனை நடத்தப்பட்டு, ராயபுரம் ராபின்சன் பூங்கா பொதுக்கூட்டத்தில் அறிவிக்கப்பட்ட இயக்கம், தனது பவள விழாவைக் கொண்டாடும் ஆண்டில் இந்திய நாடாளுமன்றத்தில் மூன்றாவது பெரிய கட்சியாகவும், சமூகநீதி - மாநில உரிமை - பன்முகத்தன்மை கொண்ட வகையில் இந்திய அரசியலைத் தீர்மானிக்கும் இயக்கமாகவும் திகழ்கிறது என்றால் இது தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் கொள்கைக்குக் கிடைத்த வெற்றி.**

**10 ஆண்டு காலமாக இந்தியாவை மதத்தின் பெயரால் பாழ்படுத்தி, கடும் விலையேற்றத்தால் மக்களை வதைத்து, அவரவர் தாய்மொழியையும் மாநில உரிமைகளையும் நசுக்கி, பன்முகத் தன்மை கொண்ட பண்பாட்டு உணர்வுகளை ஒடுக்கி, ஒரே நாடு - ஒரே மொழி - ஒரே தேர்தல் - ஒரே உணவு என்ற சர்வாதிகாரத்தனத்தை நிலைநிறுத்த முயற்சிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிராக இந்தியா கூட்டணியில் இணைந்திருப்பவை அரசியல் கட்சிகள் மட்டுமல்ல, இந்தியாவின் எதிர்காலத்தை தீர்மானிக்கப் போகிற வாக்காளர்களும்தான்.**

இந்த ஒற்றுமை உணர்வை ஒரு முகப்படுத்தி, நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெறுவது ஒன்றே, இந்திய ஒன்றியத்தைக் காப்பாற்றுவதற்கான வழி என்பதால் அதற்கான செயல்திட்டங்கள் வகுக்கப்பட்டு, அதனைச் செயல்படுத்துவதற்குப் பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அந்தக் குழுக்களில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றுத் தங்கள் பணியை மேற்கொள்கின்றனர். இந்திய அளவில் தவிர்க்க முடியாத இயக்கமாகத் திகழ்கிறது தி.மு.க எனும் பேரியக்கம்.

சென்னை மண்ணடி பவளக்காரத் தெரு, 7-ஆம் எண் வீட்டில் ஆலோசனை நடத்தப்பட்டு, ராயபுரம் ராபின்சன் பூங்கா பொதுக்கூட்டத்தில் அறிவிக்கப்பட்ட இயக்கம், தனது பவள விழாவைக் கொண்டாடும் ஆண்டில் இந்திய நாடாளுமன்றத்தில் மூன்றாவது பெரிய கட்சியாகவும், சமூகநீதி – மாநில உரிமை – பன்முகத்தன்மை கொண்ட வகையில் இந்திய அரசியலைத் தீர்மானிக்கும் இயக்கமாகவும் திகழ்கிறது என்றால் இது தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் கொள்கைக்குக் கிடைத்த வெற்றி.

தந்தை பெரியாரின் இலட்சியங்களை மக்களிடம் கொண்டு சென்று, ஜனநாயக முறையில் அவற்றை நடைமுறைப் படுத்தத் தனி இயக்கம் கண்டவர் பேரறிஞர் அண்ணா. அந்த இலட்சியங்களை நிறைவேற்ற அண்ணாவுக்குத் துணையாகவும், அண்ணாவுக்குப் பிறகு கழகத்தின் தலைவராகவும் இருந்து நிறைவேற்றியவர் தலைவர் கலைஞர். அவர்களின் தொடர்ச்சியாக, உடன்பிறப்புகளாம் உங்களின் பேராதரவுடன் கழகத்தின் பயணம் உங்களில் ஒருவனான என் தலைமையில் தொடர்கிறது.

இலட்சியங்களை நிறைவேற்றும்போது, அவற்றுக்குத் தடையாக – எதிராக நிற்கின்ற கொள்கை எதிரிகளை அடையாளம் கண்டு ஜனநாயகக் களத்தில் வீழ்த்துவதே நம் முன் நிற்கும் முதன்மையான பணி. வெற்றி – தோல்விகளைக் கடந்து இலட்சியப் பாதையில் உறுதி குலையாமல் பயணிக்கின்ற இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். களத்தில் நாம் பெற்ற விழுப்புண்கள் அதிகம். கொடுத்த விலை இன்னும் அதிகம். ஆனால், எத்தனை நெருக்கடிகள் வந்தாலும் அதனை எதிர்கொண்டு, முதுகு வளையாமல், தரையில் தவழாமல், நெஞ்சை நிமிர்த்தி நின்று, ‘நான் தி.மு.க.காரன், நான் கலைஞரின் உடன்பிறப்பு’ என்று கம்பீரமாகச் சொல்கின்ற துணிவும் வலிவுமே கழகத்தினரின் அடையாளம்.

அந்த கம்பீரத்துடன், பேரறிஞர் அண்ணா கண்ட திராவிட முன்னேற்றக் கழகம் தனது 75-ஆவது ஆண்டினை – பவள விழாவினைக் கொண்டாட இருக்கிறது. அதுவும், முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டில். இதைவிட என்ன மகிழ்ச்சி நமக்கு இருக்க முடியும்?

பெரியார் – அண்ணா – கழகம் பிறந்த செப்டம்பர் மாதத்தில் முப்பெரும் விழாவினைச் சிறப்பாக நடத்தி, கொள்கை முழக்கம் செய்யும் பல்வேறு நிகழ்ச்சிகளுடன், கழகத்திற்காகப் பாடுபட்ட இலட்சிய வீரர்களுக்கு விருதுகள் வழங்கி, சிறப்புரை ஆற்றுவது தலைவர் கலைஞர் உருவாக்கிய நடைமுறை – நன்முறை. இனமானப் பேராசிரியர் பெருந்தகை அவர்களும் கழகத்தின் முன்னோடிகளும் தலைவர் கலைஞருக்கு உறுதுணையாக இருந்து முப்பெரும் விழா நிகழ்வுகளை வெற்றிகரமாக நடத்துவார்கள். இளைஞரணி சார்பில் பெருமைமிகு பேரணிகளை நடத்தியதையும் மகிழ்ச்சியுடன் நினைவுகூர்கிறேன்.

**தலைவர் கலைஞரின் வழியில் இந்த ஆண்டும் கழகம் காத்த இலட்சிய வீரர்களுக்கு விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. பெரியார் விருது மயிலாடுதுறை திரு.சத்தியசீலன் அவர்களுக்கும், அண்ணா விருது மீஞ்சூர் திரு.க.சுந்தரம் அவர்களுக்கும், கலைஞர் விருது கழகத்தின் துணைப் பொதுச்செயலாளர் - மாண்புமிகு அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கும், பாவேந்தர் விருது தென்காசி திருமதி. மலிகா கதிரவன் அவர்களுக்கும், பேராசிரியர் விருது பெங்களூரு திரு. ந.இராமசாமி அவர்களுக்கும் செப்டம்பர் 17 அன்று தீரமிக்க வேலூர் மாநகரில் நடைபெறவுள்ள கழகத்தின் பவள விழாவுடன் கூடிய முப்பெரும் விழாவில் வழங்கப்படும். கழகத்தின் வளர்ச்சிக்காக சிறப்பாக பாடுபடும் ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்களுக்கான விருது களும் முப்பெரும் விழாவில் வழங்கப்பட இருக்கின்றன.**

வீரம் செறிந்த வேலூரின் அடையாளமாக கோட்டை இருப்பதுடன், வேலூர் எப்போதும் தி.மு.கழகத்தின் கோட்டைதான் என்பதைப் பல்வேறு களங்களில் நிரூபித்திருக்கிறது. கழகப் பொதுச் செயலாளர் அன்பு அண்ணன் மாண்புமிகு அமைச்சர் துரைமுருகன் அவர்களை நமக்கு வழங்கியுள்ள கோட்டை. தனது மாணவப் பருவத்திலேயே மொழிப் போர்க் களம் கண்டு, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாக, அவரின் நிழலாக, கழகத்தின் வளர்ச்சிக்குத் தன்னை ஒப்படைத்துக் கொண்டு, கொள்கைத் தடம் மாறாமல் பயணிக்கின்ற பொதுச் செயலாளர் அவர்களின் தலைமையில் வேலூரில் முப்பெரும் திருவிழா - கழகப் பவள விழா நடைபெறுகிறது. விழாவிற்கான பணிகளை மாவட்டக் கழகச் செயலாளர் நந்தகுமார் அவர்களும் கழக நிர்வாகிகளும் இணைந்து சிறப்பாக மேற்கொண்டுள்ளனர்.

**கலைஞர் நூற்றாண்டு தொடக்கமும், கழகத்தின் பவள விழா தொடக்கமும் இணைந்த இந்த ஆண்டில், வேலூரில் நடைபெறவிருக்கும் முப்பெரும் விழாவிற்கு உடன்பிறப்புகளாம் உங்களை அழைப்பதில் உங்களில் ஒருவனான நான் அகம் மிக மகிழ்கிறேன். 2024 நாடாளுமன்றத் தேர்தலில் மகத்தான வெற்றிக்கு அச்சாரமிடும் வேலூர் முப்பெரும் விழாவுக்கு கொள்கைப் படையாகத் திரண்டு வருக. கழகம் காப்போம் - மொழியைக் காப்போம் - மாநில உரிமை காப்போம் - மக்கள் வாழும் வகையில் நாட்டைக் காப்போம் என்ற உறுதியைத் தருக.**

நாற்பதும் நமதே – நாடும் நமதே என்ற இலக்கை அடைந்திடச் சூளுரைக்கும் விழாவாக வேலூர் முப்பெரும் விழா அமையட்டும். அடுத்த ஆண்டு, முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவும் – கழகப் பவள விழா நிறைவும் வெற்றிக் கொண்டாட்டங்களாக மலரட்டும்.

அன்புடன்

**மு.க.ஸ்டாலின்**

திருவள்ளுவர் ஆண்டு 2054,
ஆவணி 17,
03.09.2023

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

திங்கள்கிழமை 04-09-2023

# மும்பையில் முழு வெற்றி!

பாட்னாவில் கருவாகி –

பெங்களூரில் உருவாகி –

மும்பையில் திருவாகி இருக்கிறது ‘இந்தியா’ கூட்டணி. இது பா.ஜ.க.வுக்கும் குறிப்பாக பிரதமர் நரேந்திர மோடிக்கும் எத்தகைய கலக்கத்தை உருவாக்கி இருக்கிறது என்பதற்கு உதாரணம்தான் – சிலிண்டர் விலையை 200 ரூபாய் குறைத்தது ஆகும். இந்தியா கூட்டணிக் கூட்டம் நடக்க நடக்க ... சிலிண்டரின் மொத்த விலையே 200 தான் என்கிற அளவுக்கு பிரதமர் குறைத்தாலும் குறைத்துவிடுவார்.

**மும்பை கூட்டமானது முழு வெற்றியாக அமைந்திருப்பதால் தான் அதனை திசை திருப்புவதற்காக – ‘ஒரே நாடு – ஒரே தேர்தல்’ என்ற குழப்பக் கொள்கையை கையில் எடுத்துள்ளார் பிரதமர் நரேந்திர மோடி. இதன் மூலமாக ஒன்று சேர்ந்துள்ள எதிர்க்கட்சிகளுக்குள் குழப்பம் ஏற்படுத்தலாமா என்று பார்க்கிறார் அவர். ‘இந்தியா’ கூட்டணி மிகத் தெளிவாக இருக்கிறது. ‘பா.ஜ.க.வை வீழ்த்து வது ஒன்றே இலக்கு’ என்பதில் அவர்கள் தெளிவாக இருக்கிறார்கள். அந்த ஒற்றை முழக்கத்தைத் தவிர வேறு எதையும் அவர்கள் கையில் எடுக்கவில்லை.**

இதனை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மும்பைக் கூட்டத்திலேயே தெளிவுபடுத்தி இருக்கிறார்கள். “எதிர்க்கட்சிகள் ஒன்று சேர மாட்டார்கள் என்று நினைத்தது பா.ஜ.க. ஒரே கூட்டத்தில் பிரிந்து விடுவார்கள் என நினைத்தார்கள். கூட்டணியாக இணைந்து – அதற்கு பெயரும் சூட்டி மூன்றாவது ஆலோசனைக் கூட்டத்தை நடத்திவிட்டோம் என்பது நமது பக்குவத்தை மட்டுமல்ல நம்முடைய உறுதியையும் காட்டுகிறது.

**இத்தகைய உறுதியுடன் செயல்பட்டு வரும் அகில இந்தியக் கட்சித் தலைவர்கள் – மாநிலக் கட்சியின் தலைவர்கள் – மாநில முதலமைச்சர்கள் ஆகிய அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வெற்றிப் பாதையில் நாம் பயணித்து வருகிறோம் என்பதன் அடையாளம் இது” என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதே கருத்தைத் தான் அனைத்துத் தலைவர்களும் எதிரொலித்தார்கள்.**

**“இந்திய ஜனநாயகத்தைக் காப்பாற்றுவது என்ற ஒற்றை இலக்கின் முன்பு, நிச்சயமாக பா.ஜ.க. தோற்கடிக்கப்படும் என்பதில் சந்தேகமில்லை” என்றார் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். ஆம்! என்பதை உறுதிப்படுத்தி இருக்கிறது மும்பை கூட்டம்.**

14 உறுப்பினர்கள் கொண்ட ஒருங்கிணைப்பு மற்றும் தேர்தல் வியூகக் குழு அமைக்கப்பட்டு விட்டது. இதேபோல் பிரச்சாரக் குழு, பத்திரிகையாளர்கள் குழு, சமூக ஊடகக் குழு, ஆய்வுக் குழு ஆகிய குழுக்களும் அமைக்கப் பட்டு விட்டன. தொகுதிப் பங்கீடுகளைத் தொடங்கி விடுங்கள் என்றும் ‘இந்தியா’ கூட்டணி அறிவித்துள்ளது.

**“இந்தியா கூட்டணிக் கட்சிகளான நாங்கள் வரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் முடிந்தவரை ஒன்றாகப் போட்டியிட்ட முடிவு செய்திருக்கிறோம். பல்வேறு மாநிலங்களில் தொகுதி பங்கீடு ஏற்பாடுகள் உடனடியாக தொடங்கப்படும்” என்பது தீர்மானமாக நிறைவேற்றப் பட்டுள்ளது. ‘எல்லா இடங்களிலும் பா.ஜ.க.வுக்கு எதிராக இருமுனைப் போட்டியை உருவாக்க முடிவு செய்துள்ளோம்’ என்று சொல்லி இருக்கிறார் உத்தவ் தாக்கரே. மூன்றாவது அணியை உருவாக்க நினைத்தது பா.ஜ.க. அதற்கு முற்றுப்புள்ளி வைத்து, இரண்டு அணிகளோடு நிறுத்த வைத்தது தான் தி.மு.க. தலைவரின் மகத்தான சாதனை ஆகும்.**

பாட்னாவில் 19 கட்சிகளின் அணிச்சேர்க்கையாக இருந்தது. பெங்களூருவில் 26 கட்சிகளின் இணைப்பாக வளர்ந்தது. மும்பையில் 28 கட்சிகளாக வளர்ந்து வருகிறது. இன்னும் பல கட்சிகள் வரலாம். காங்கிரஸையும் உள்ளடக்கிய அணிச் சேர்க்கை தான் வெற்றிகரமாக அமையும் என்பதை தொடர்ந்து சொல்லி வந்தவர் தி.மு.க. தலைவர் அவர்கள்.

**“நாங்கள் எடுத்துள்ள முடிவுகள் பா.ஜ.க.வை வீழ்த்துவதை உறுதி செய்துள்ளது. ஒருங்கிணைப்புக் குழுவை நாங்கள் அமைத்துள்ளது இதனை உறுதி செய்துள்ளது. இந்தியா கூட்டணி நிச்சயமாக பா.ஜ.க.வை வீழ்த்தும்” என்றார் ராகுல் காந்தி. “இந்திய மக்களின் 60 சதவிகிதத்தை நாங்கள் பிரதிபலிக்கிறோம்” என்றும் ராகுல் சொன்னார். “தேர்தல் முன்கூட்டியே நடத்தப்படலாம். நாம் முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டும். இந்த கூட்டத்தின் நோக்கம் மத்தியில் உள்ளவர்களை வெளியேற்ற வேண்டும் என்பதுதான். நாங்கள் ஒன்றாக இருக்கிறோம். வரலாற்றை மாற்றி எழுத பா.ஜ.க.வை நாங்கள் அனுமதிக்க மாட்டோம்” என்று திட்டவட்டமாகச் சொல்லி இருக்கிறார் பீகார் முதலமைச்சர் நிதிஷ்குமார். “நாங்கள் அமைத்திருப்பது சில கட்சிகளின் கூட்டணி அல்ல. புதிய இந்தியாவை உருவாக்க விரும்பும் 140 கோடி மக்களின் கூட்டணி ஆகும்” என்று சொன்னார் ஆம் ஆத்மி கட்சித் தலைவர் அரவிந்த் கெஜ்ரிவால்.**

“நாங்கள் ஒருபோதும் தவறு செய்ய மாட்டோம்” என்று உறுதி அளித்திருக்கிறார் சரத்பவார். நரேந்திர மோடி – அமித்ஷா – நிதின் கட்கரி – யோகி ஆதித்யநாத் – மோகன் பகவத் என பா.ஜ.க. தான் பல கோஷ்டிகளாகக் கலகலகத்துப் போயிருக்கிறதே தவிர ‘இந்தியா’ கூட்டணி அல்ல. ‘இந்தியா’ கூட்டணியை வழிநடத்துவது தனி மனிதர்களல்ல, தத்துவங்கள் ஆகும். பா.ஜ.க., மோடி என்ற ஒற்றை முகத்தைக் காட்டி வெற்றி பெற நினைக்கிறது. அந்த முகத்தின் சாயம் வெளுத்துவிட்டது. ஆனால், இந்தியா கூட்டணியானது பல்வேறு தத்துவங்களை முன்னிலைப் படுத்துகிறது. இந்த தத்துவங்கள் வெல்லும் தத்துவங்களாக அமைந்துள்ளன. இவை காலம் காலமாக இந்தியாவைக் காப்பாற்றி வந்த தத்துவங்கள் ஆகும்.

‘இந்தியா’ கூட்டணியை வெற்றி பெற வைப்பதன் மூலமாக இந்த தத்துவங்களைக் காக்கலாம். இந்த தத்துவங்களை காப்பாற்றுவதன் மூலமாக இந்தியாவைக் காப்பாற்றலாம். இந்த ஒற்றை நோக்கத்தை கூர்மை யாக்கியதன் மூலமாக மும்பை கூட்டமானது முழு வெற்றியை ஈட்டித் தந்துள்ளது.

## கேரளாவுக்கு ஆரஞ்சு எச்சரிக்கை

திருவனந்தபுரம், செப். 4-

வங்க கடலில் ஏற்பட்டுள்ள புயல் சுழற்சி காரணமாக தமிழகம் மற்றும் கேரள மாநிலங்களில் கடந்த 2 நாட்களாக மழை பெய்து வருகிறது. இந்த மழை கேரள மாநிலத்தில் இன்னும் 5 நாட்களுக்கு கனமழையாக நீடிக்கும் என்று இந்திய வானிலை மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

2 சூறாவளி சுழற்சிகள் இணைந்திருப்பதால் வியாழக்கிழமை வரை மழையின் தாக்கம் இருக்கும் என்பதால், மலைப்பாங்கான கிராமங்களில் வசிப்பவர்கள் பாதுகாப்புடன் இருக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கொல்லம், ஆலப்புழா, இடுக்கி மற்றும் பத்தனம் திட்டா மாவட்டங்களில் இந்த மழை அதிக அளவில் இருக்கும் என கூறப்பட்டுள்ளது. இதன் காரணமாக திருவனந்தபுரம், கொல்லம், ஆழப்புழா மற்றும் பத்தனம் திட்டா மாவட்டங்களுக்கு இன்றும், நாளையும் மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது. மேலும் ஆலப்புழா மாவட்டத்திற்கு நாளை மற்றும் 5ந்தேதியும், இடுக்கி மாவட்டத்திற்கு 6ந்தேதியும் ஆரஞ்சு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.




### கலைஞர் 100 – கழக மகளிர் அணி சார்பில் செப். 15-ல்

# வினாடி – வினா போட்டிக்குத் தயாராகுங்கள்!

## தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அழைப்பு!

**சென்னை, செப்.4-**

**தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது சமூக வலைத்தள வீடியோ பதிவில், “கழக மகளிர் அணி சார்பில் தங்கை கனிமொழி கருணாநிதி எம்.பி. முன்னெடுப்பில் செப்.15 அன்று நடைபெறும். “கலைஞர் 100- வினாடி வினா” போட்டிக்கு அனைவரும் தயாராகுங்கள்” என்று அன்பழைப்பு விடுத்துள்ளார்.**



கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது சமூக வலைதளப் பக்கத்தில் வீடியோ மூலம் விடுத்த அன்பழைப்பு வருமாறு:-

தமிழ் இனத்தின் அறிவொளியாக, தன்னிகரில்லா ஆளுமையாக வாழ்ந்து வழிகாட்டிய தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டில், திராவிட இயக்கத்தை, தமிழ்நாடு என்னும் பெரும் நிலத்தை, தமிழ் இன வரலாற்றை அனைவரும் அறிந்திடும் வண்ணம், நம் கழக துணைப் பொதுச் செயலாளர் தங்கை கனிமொழி எம்.பி. அவர்களது முன்னெடுப்பில் “கலைஞர் -100” – வினாடி – வினா போட்டி, கழக மகளிர் அணிச் சார்பில் நடைபெறவிருக்கிறது.

நமது முந்தைய களப் போராட்டங்களை, அரசியல் புரட்சிகளை அதற்கு வித்திட்ட நம் முன்னோடிகளை, நம் அடுத்த தலைமுறையினருக்கு எடுத்துக் கூறவும் இந்த “வினாடி – வினா” போட்டி பெரும் வாய்ப்பாக அமையும்!

10 ஆயிரம் கேள்விகளோடு 18 வயதுக்குட்பட்டவர்கள் மற்றும் 18 வயதுக்கு மேலானவர்களுக்கு – என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு மூன்று சுற்றுகளாக நடைபெறும்.

இந்த வினாடி – வினா போட்டியில் எல்லோரும் கலந்து கொண்டு தங்களின் அறிவுத் திறனை வெளிப்படுத்தலாம்.

www.Kalaignar100.co.in என்ற இணைய தளத்தில் பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளான வருகிற செப்டம்பர் 15 அன்று இணைய வழிப் போட்டிகள் தொடங்கவிருக்கின்றன!

வரலாற்றின் தனிப்பெரும் மக்கள் இயக்கத்தை இணையில்லா நம் தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டில் கொண்டாடுவோம்! வாருங்கள்!!

இவ்வாறு கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது சமூக வலைதளப் பக்கத்தில் வீடியோ மூலம் அன்பழைப்பு விடுத்துள்ளார்.

இந்நிலையில் இதுகுறித்து கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டைக் கொண்டாடும் வகையில் கழக மகளிரணி சார்பில் தங்கை கனிமொழி கருணாநிதி எம்.பி. முன்னெடுக்கும் -கலைஞர்100- வினாடி - வினா போட்டி முயற்சி பாராட்டத் தக்கது.**

**செப்டம்பர் 15-ஆம் நாள் தொடங்கவுள்ள உள்ள - Kalaignar100quiz வினாடி-வினா போட்டிக்கு இப்போதில் இருந்தே தயாராகுங்கள்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது சமூக வலைதளப் பதிவில் குறிப் பிட்டுள்ளார்.

### நாடாளுமன்றக் கழகக் குழுத் தலைவர்

# டி.ஆர்.பாலு கோரிக்கையை ஏற்று மருத்துவ நிதி உதவி!

*புதுடெல்லி, செப். 3-*

*திராவிட முன்னேற்றக் கழகப் பொருளாளரும், கழக நாடாளுமன்றக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு, சென்னை அயப்பாக்கம் பகுதியைச் சேர்ந்த திருமதி பார்வதி, சென்னை படப்பையைச் சேர்ந்த நடராஜன் மற்றும் சென்னை நாவலூரரைச் சேர்ந்த பால்ராஜ் ஆகிய மூவரது புற்றுநோய் சிகிச்சைகளுக்காக பிரதமர் தேசிய நிவாரண நிதியிலிருந்து உதவிடுமாறு முறையே 7.7.2023, 10.7.2023 மற்றும் 16.7.2023 ஆகிய தேதிகளில் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்குத் தனித் தனியே கடிதங்கள் எழுதியிருந்தார்.*

*டி.ஆர்.பாலு அவர்களின் பரிந்துரையினையும் வேண்டுகோளினையும் ஏற்ற பிரதமர் அவர்கள், திருமதி பார்வதி அவர்களின் புற்றுநோய் சிகிச்சைக்காக ரூபாய் இரண்டு லட்சத்து ஐம்பதாயிரமும் (ரூ.2,50,000/), நடராசன் அவர்களின் சிகிச்சைக்காக ரூபாய் மூன்று லட்சமும் (ரூ.3,00,000/) மற்றும் பால்ராஜ் அவர்களின் சிகிச்சைக்காக ரூபாய் ஒரு லட்சமும் (ரூ.1,00,000/) பிரதமர் தேசிய நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.*

*இது தொடர்பாக பிரதமர் அலுவலகம், டி.ஆர். பாலு எம்.பி. அவர்களுக்கு, 18.7.2023 தேதியிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ள விவரம் வருமாறு:*

*பிரதமரின் தேசிய நிவாரண நிதியிலிருந்து, திருமதி பார்வதி, நடராஜன் மற்றும் பால்ராஜ் ஆகியோரது புற்றுநோய் சிகிச்சைகளுக்காக வழங்கப்படும் மொத்த உதவித் தொகையான 6 லட்சத்து*

## பிரதமர் அலுவலகம் கடிதம்!

*50 ஆயிரம் ரூபாயானது, பயனாளர்கள் சிகிச்சை பெறும் மருத்துவமனைகளான சென்னையில் உள்ள அடையாறு புற்றுநோய் மையம் மற்றும் போரூர் ஸ்ரீ இராமச்சந்திரா மருத்துவமனைகளுக்கு வழங்கப்படும் என்றும், சிகிச்சை நிறைவு பெற்றவுடன், உரிய ஆவணங்களின் நகலை பிரதமர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும், ஆவணங்கள் கிடைத்த பின்னர், உதவித் தொகையானது உடனடியாக மேற்குறிப்பிட்ட மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும், பிரதமர் அலுவலகக் கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது.*



தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளத்தில் உள்ள ஜி.வி.மஹாலில் நடைபெற்ற விளாத்திகுளம் பேரூர் கழகச் செயலாளர் வேலுச்சாமி இல்லத் திருமண விழாவில் கலந்துகொண்டு மணமக்கள் குருபிரசாத் பிரியதர்ஷினி ஆகியோருக்கும், அதனைத் தொடர்ந்து மார்த்தான்டம்பட்டியில் நடைபெற்ற தி.மு.க. மாவட்ட பிரதிநிதி புதுராஜனின் இல்லத் திருமண விழாவில் கலந்துகொண்டு மணமக்கள் மாரிப்பாண்டி கார்த்திகா ஆகியோருக்கு தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக்குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி மண மக்களை வாழ்த்தினார். உடன், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சரும், தூத்துக்குடி வடக்கு மாவட்ட செயலாளருமான பெ.கீதா ஜீவன், சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.சி.சண்முகையா, ஜி.வி.மார்கண்டேயன், மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, ஒன்றிய செயலாளர்கள் சின்னமாரிமுத்து, நவநீதகண்ணன், மும்மூர்த்தி, காசி விஸ்வநாதன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

## அதிபராகும் நோக்கில் மோடியின் சர்வாதிகாரப் போக்கு!

# ஒரே நாடு - ஒரே தேர்தல் சதித் திட்டம்!

## வடசென்னை ந.மனோகரன் இல்ல மணவிழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் எச்சரிக்கை!



முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.9.2023) சென்னையில், கழக தலைமை செயற்குழு உறுப்பினர் மனோகரன் அவர்களின் மகன் மகேஷ்குமார் – ரம்யா ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தினார். உடன் கழகப் பொருளாளரும், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான டி.ஆர். பாலு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே. சேகர் பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சென்னை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் இளையஅருணா, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ப.தாயகம் கவி, ஜே.ஜே. எபிநேசர், ஐட்ரீம் ஆர். மூர்த்தி, கே.பி.சங்கர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டி.கே.எஸ்.இளங்கோவன் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் ஆகியோர் உள்ளனர்.

**சென்னை, செப். 4 -**

**அதிபராகும் நோக்கில் செயல்படும் மோடியின் சர்வாதிகாரப் போக்கு தான் ஒரே நாடு - ஒரே தேர்தல் எனும் சதித் திட்டம் என வடசென்னை ந.மனோகரன் இல்ல மணவிழாவில் மணவிழாவில் மணமக்களை வாழ்த்தி உரையாற்றுகையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எச்சரிக்கை விடுத்தார்!**

கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (03.09.2023) காலை, சென்னையில் நடைபெற்ற தலைமைச் செயற்குழு உறுப்பினர் ந.மனோகரன் இல்லத் திருமண விழாவுக்குத் தலைமையேற்று நடத்தி வைத்து ஆற்றிய உரை வருமாறு:

நம்முடைய தலைமைச் செயற்குழு உறுப்பினர் அருமை சகோதரர் மனோகரன் அவர்களது இல்லத்தில் நடைபெறும் இந்த மண விழா நிகழ்ச்சியில் பங்கேற்பதில், அதிலும் இந்த மணவிழா நிகழ்ச்சிக்குத் தலைமையேற்று மணவிழாவை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தும் ஒரு சிறப்பான வாய்ப்பினைப் பெற்றமைக்கு நான் மகிழ்ச்சி அடைகிறேன், பெருமைப்படுகிறேன்.

**சகோதரர் மனோகரன் இல்ல விழாக்களில் பங்கேற்பது மகிழ்ச்சி!**

இன்றைக்கு நடைபெறும் இந்த திருமணத்திற்கு நான் தலைமையேற்று வாழ்த்த வந்திருக்கிறேன் என்று சொன்னால், ஏதோ மனோகரன் இல்லத்தில் நடைபெறும் முதல் திருமணம் மட்டுமல்ல இது, ஏற்கனவே இரண்டு திருமணங்களை, அவரே இங்கே சொன்னது போல நடத்தி வைத்திருக்கிறேன்.

அவருடைய மகளுக்கு 2017-ஆம் ஆண்டு நடைபெற்ற திருமணத்தை நான் தான் நடத்தி வைத்தேன். அதற்கு பின்பு 2018-ஆம் ஆண்டு அவருடைய மகனுக்கு நடைபெற்ற திருமணத்தையும் நான்தான் தலைமையேற்று நடத்தி வைத்திருக்கிறேன். இன்றைக்கு அவருடைய மகனுக்கு நடைபெறும் திருமணத்தையும் நான்தான் தலைமையேற்று நடத்தி வைத்திருக்கிறேன். இன்னும் ஏதாவது மகன்கள், மகள்கள் இருந்தாலும் அதற்கும் நான்தான் வருவேன். நல்லவேளை மகன்கள், மகள்கள் இல்லை. பேரன்கள்தான் இருக்கிறார்கள். நிச்சயம் உறுதியாக அந்தப் பேரன்களுக்கும் நான் தான் திருமணத்தை நடத்தி வைப்பேன். எனவே உங்களோடு சேர்ந்து மணக்கோலம் பூண்டிருக்கும் மணமக்களை நானும் வாழ்த்துவதற்கு கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே நம்முடைய பொருளாளர் டி.ஆர். பாலு அவர்கள் சொன்னதுபோல, அவருடைய தந்தை மெட்டல் பாக்ஸ் நடராஜன் அவர்கள், இந்த வட்டாரத்தில் - இந்தப் பகுதியில் - இந்த மாவட்டத்தில் கழகத்தின் தளபதியாக விளங்கியவர். மெட்டல் பாக்ஸ் நடராஜனை இந்தப் பகுதியில் இருப்பவர்கள்,

## சி.ஏ.ஜி. அறிக்கைக்கு இதுவரை பிரதமர் மோடி பதிலளிக்காதது ஏன்?

கட்சிக்காரர்கள், கட்சிக்காரர்கள் மட்டுமல்ல எந்தக் கட்சிக்காரர்களாக இருந்தாலும், கட்சியைத் தாண்டி இருப்பவர்களாக இருந்தாலும் அவரைத் தெரியாதவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். எனவே அந்த அளவிற்கு ஒரு சிறப்பான பெயரை பெற்றவராக - மக்கள் தொண்டாற்றுபவராக கட்சிக்கு தொண்டாற்றுபவராக விளங்கியவர்.

**அண்ணா காலத்திலிருந்து கழகத்திற்கு பாடுபட்ட மெட்டல் பாக்ஸ் நடராஜன்!**

அறிஞர் அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை தொடங்கிய காலத்தில் இருந்து மெட்டல் பாக்ஸ் நடராஜன் அவர்கள் இந்த இயக்கத்தில் தன்னை ஒப்படைத்துக் கொண்டு பல்வேறு பொறுப்புகளில் இருந்து அவர் பணியாற்றி இருக்கிறார்.

அதைத் தொடர்ந்து அவரைப் போலவே அவருடைய மகன் மனோகரன் அவர்கள் 1984-இல் இளைஞர் அணியில் வட்ட அமைப்பாளராக பொறுப்பேற்று அவர் பணியாற்றி இருக்கிறார். அதற்கு பின்பு 172-ஆவது வட்டமாக இருந்த வட்டக் கிளையில் அவைத் தலைவராக இருந்தும் பணியாற்றி இருக்கிறார்.

இடையில்தான் கொஞ்சம் அவரைக் காணவில்லை. பாலு சொன்னதுபோன்று காணாமல் போய்விடவில்லை. ஒதுங்கி இருந்தார். ஏதோ தனிப்பட்ட காரணமோ அல்லது சூழல் காரணமோ - ஏதோ நிலையில் ஒதுங்கி இருந்தாலும், ஆனால் உடனடியாக நம்மிடத்தில் வந்து விட்டார்.

நான் இப்போதும் நினைத்துப் பார்க்கிறேன், அவர் எப்படி நம்மைவிட்டு கொஞ்ச நாள் ஒதுங்கி இருந்தாலும் அதன்பின் நம்மிடம் வந்து எப்படி சேர்ந்தார் என்பதைப் பற்றி நினைத்துப் பார்க்கிறபோது, 2013-ஆம் ஆண்டு இங்கு நம்முடைய கழகத்தில் இருக்கும் ஒரு முன்னோடி மறைவெய்திய செய்தியை கேட்டு அவருக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக நான் வந்திருந்தேன். நான் நடந்து வந்தபோது அவர் கடை வழியாகப் போகிறபோது, அவர் கடையில் உட்கார்ந்து இருக்கிறார். “என்ன மனோகரன் நன்றாக இருக்கிறீர்களா?” என்று கேட்டு நான் உள்ளே சென்று விட்டேன். அன்றைக்கே தி.மு.க.வில் வந்து உடனே சேர்ந்து விட்டார். அதைத்தான் இப்போது நான் நினைத்துப் பார்க்கிறேன்.

> **‘இந்தியா’ என்று சொன்னாலே இன்றைக்கு நிறைய பேருக்கு பயம் ஆகிவிட்டது. அதிலும் பாரதீய ஜனதா கட்சிக்கு அச்சமே ஏற்பட்டிருக்கிறது. இந்தியா என்ற பெயரைச் சொல்வதற்கே கூச்சப்படுகிறார்கள், அச்சப்படுகிறார்கள்.**

**சுற்றுப்பயணங்களில் எனக்கு பாதுகாவலராக வந்த மனோகரன்!**

அது மட்டும் அல்ல, தொடக்க காலத்தில் இளைஞரணி தொடங்கிய நேரத்தில் நான் எங்காவது சுற்றுப்பயணம் செய்கிறேன் என்று சொன்னால் சென்னையில் மட்டுமல்ல, வெளியூருக்கு எங்காவது செல்கிறேன் என்று சொன்னால் எனக்குப் பாதுகாவலராக வந்தவர்தான் நம்முடைய மனோகரன் அவர்கள். எப்படி அன்றைக்கு பாதுகாவலராக இருந்து எனக்கு அந்தப் பணியை தொடங்கினாரோ, இன்றைக்கும் எனக்கு மட்டுமல்ல, கழகத்துக்கும் பாதுகாவலராக இருந்து தன்னுடைய கடமையை அவர் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார். எனவே அவருடைய இல்லத்தில் அவருடைய மகனுக்கு நடைபெறும் நிகழ்ச்சியில் பங்கேற்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

சட்டதிட்டக் குழு உறுப்பினராக, அதற்குப் பின்னால் செயற்குழு உறுப்பினராக இருந்து தன்னுடைய கடமையை அவர் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்.

**யார் காலிலும் விழுந்து, தவழாமல் செயல்படும் கொள்கைக் குடும்பம்!**

அவர் மட்டுமல்ல, அவருடைய மகன் - மணமகனாக வீற்றிருக்கும் மகேஷ் குமார் அவர்களும் இன்றைக்கு மாணவரணியில் மாவட்டத் துணை அமைப்பாளராக இருந்து பணியாற்றிக் கொண்டிருக்கிறார். இதைப் பார்த்தவுடனே கழகமே குடும்பம், வாரிசு... வாரிசு என்று பேசுவார்கள். கழகம்தான் குடும்பம், குடும்பம்தான் கழகம். அதில் எந்த மாற்றமும் கிடையாது. ஆனால் அதே நேரத்தில் கொள்கைக் குடும்பமாக இருக்கிறோமா இல்லையா என்பதுதான் முக்கியம். யார் காலிலும் பாதத்திலும் விழுந்து வளர்ந்த குடும்பம் அல்ல இது. தவழ்ந்து சென்று வளர்ந்த குடும்பம் அல்ல இது. இலட்சியக் குடும்பமாக, ஒரு கொள்கைக் குடும்பமாக, மெட்டல் பாக்ஸ் நடராஜனில் இருந்து- மனோகரனில் இருந்து - இன்றைக்கு அவருடைய மகனாக இருப்பவர்கள் எல்லாம் இன்றைக்கு நம்முடைய இயக்கத்தில் இருக்கிறார்கள் என்று சொன்னால், இதுதான் அண்ணா அவர்கள் உருவாக்கிய இயக்கம், அண்ணா அவர்கள் ஒரு குடும்பப் பாச உணர்வோடு இந்த இயக்கத்தை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள்.

ஆனால் இது சிலருக்கு இன்றைக்கு வயிற்

## பா.ஜ.க.வின் திட்டத்தை ஆதரித்து பலிகடா ஆகப்போகும் அ.தி.மு.க.!

றெரிச்சலாக இருக்கிறது. அதில் என்னென்ன பேசுகிறார் என்பதை எல்லாம் நான் விமர்சனம் செய்ய விரும்பவில்லை. அதைப்பற்றி நாம் கவலையும் படவில்லை.

**இந்தியாவை காப்பாற்ற வேண்டிய அவசியம் இன்றைக்கு இருக்கிறது!**

இன்றைக்கு நாட்டிற்கு ஏற்பட்டிருக்கும் நிலையை நீங்கள் எல்லாம் உணர்ந்து பார்க்க வேண்டும். எவ்வாறு சட்டமன்றத்தில் தேர்தல் நடந்தபோது தமிழ்நாட்டைக் காப்பாற்ற வேண்டும் என்ற உணர்வோடு நீங்கள் எல்லாம் ஒரு சிறப்பான வெற்றியைத் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு - நம்முடைய கூட்டணிக்கு ஏற்படுத்திக் கொடுத்தீர்களோ, அதே போல் இந்தியாவைக் காப்பாற்றுவதற்கு ஒரு அவசியம் ஏற்பட்டிருக்கிறது. நான் பலமுறை சொல்லி இருக்கிறேன், யார் பிரதமராக வரவேண்டும்? யார் ஆட்சிக்கு வரவேண்டும்? என்பதல்ல; யார் ஆட்சிக்கு வரக்கூடாது என்பதுதான் நம்முடைய இலட்சியமாக - நோக்கமாக இருக்க வேண்டும்.

எனவே இந்தியா என்று சொன்னாலே இன்றைக்கு நிறைய பேருக்கு பயம் ஆகிவிட்டது. அதிலும் பாரதீய ஜனதா கட்சிக்கு அச்சமே ஏற்பட்டிருக்கிறது. இந்தியா என்ற பெயரைச் சொல்வதற்கே கூச்சப்படுகிறார்கள், அச்சப்படுகிறார்கள்.

## தேர்தல் செலவைக் குறைக்கிறீர்களோ இல்லையோ - கொள்ளையடிப்பதை நிறுத்துங்கள்!

**‘இந்தியா’ கூட்டணியின் பெயரைக்கண்டு அஞ்சி நடுங்கும் பா.ஜ.க.!**

**இந்தியா கூட்டணி அமைத்து முதன் முதலில் பீகார் மாநிலத்தில் நிதீஷ் குமார் அவர்கள், பா.ஜ.க. ஆட்சிக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பதற்காக இந்தியாவில் இருக்கும் எதிர்க்கட்சிகளை எல்லாம் ஒன்று திரட்டி பாட்னாவில் ஒரு கூட்டத்தை நடத்தி, அதில் ஒற்றுமையாகச் செயல்பட வேண்டும் என்று உறுதி எடுத்தோம். அதற்கு பின்னால் கர்நாடக மாநிலம் பெங்களூருவில் மீண்டும் இரண்டாவது முறையாகக் கூடி இந்தக் கூட்டணிக்கு ‘இந்தியா‘ என்ற பெயரைத் தேர்ந்தெடுத்து, அதை அறிவித்து, அதற்குப் பிறகு மராட்டிய மாநிலம் மும்பையில் மூன்றாவது கூட்டத்தை நடத்தி, நம்முடைய கூட்டங்கள் எப்படி செயல்பட வேண்டும், அப்படி செயல்படுவதற்கு என்னென்ன அமைப்புகள் ஏற்படுத்த வேண்டும், தேர்தல் களத்தில் நாம் எப்படி ஈடுபட வேண்டும், பிரச்சாரத்தை எப்படி நடத்த வேண்டும், எப்படி எல்லாம் நம்முடைய பணி அமைந்திட வேண்டும் என்பதற்காக அதற்கென்று சில குழுக்கள் எல்லாம்கூட அமைக்கப்பட்டு வெற்றிகரமாக நடத்தி முடித்திருக்கிறோம்.**

**அவசரமாக நாடாளுமன்றக் கூட்டத்தை கூட்ட வேண்டிய அவசியம் என்ன?**

எனவே இதையெல்லாம் பார்த்து அஞ்சி, நடுங்கி இன்றைக்கு பா.ஜ.க. என்ன செய்திருக்கிறது என்று சொன்னால் திடீரென்று நாடாளுமன்றத்தைக் கூட்டப் போகிறோம் என்று அறிவித்திருக்கிறார்கள். ஆனால் நாடாளுமன்றத்தைக் கூட்ட வேண்டிய அவசியம் இன்றைக்கு எதற்காக அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால், ‘ஒரே நாடு - ஒரே தேர்தல்‘ என்ற ஒரு நிலையை ஏற்படுத்துவதற்காக சில முயற்சிகள் நடந்து கொண்டிருக்கிறது.

**அந்த ஒரே நாடு - ஒரே தேர்தலை எப்படி செயல்படுத்த வேண்டும் என்பதற்காக ஒரு குழுவை அமைத்திருக்கிறார்கள். அந்தக் குழுவிற்கு யார் தலைவர் என்றால், இந்திய நாட்டின் முன்னாள் ஜனாதிபதி. இந்திய நாட்டின் முதல் குடிமகன் என்று சொல்கிறோம் அல்லவா, அந்த ஜனாதிபதி பொறுப்பில் இருந்தவரைத் தலைவராக போட்டிருக்கிறார்கள். இந்திய நாட்டின் ஜனாதிபதி என்பவர் ஒரு பொதுவானவர். அவர் பதவியில் இருந்து விலகினாலும், அவர் அரசியலுக்கு வரக்கூடாது அல்லது அரசியல் சம்பந்தப்பட்ட எந்தப் பிரச்சினையிலும் தலையிடுவது அவருக்கு நியாயம் கிடையாது. அதுதான் மரபு. அவர் ஒரு பொதுவானவராக மாறிவிடுகிறார்.**

**ஒரே நாடு - ஒரே தேர்தல் முயற்சிக்கு தலையாட்டி பொம்மைகளைக் கொண்ட குழு!**

**ஆனால் அதை எல்லாம் இன்றைக்குக் கொச்சைப்படுத்தி, கேவலப்படுத்தி அதையெல்லாம் பற்றிக் கவலைப்படாமல், இவர்கள் சொல்வதை அவர் கேட்பார் என்பதற்காக அவரைப் போட்டு, அதற்குப் பிறகு அதில் சில உறுப்பினர்களைப் போட்டிருக்கிறார்கள். அந்த உறுப்பினர்களிலாவது எல்லா கட்சியும் கலந்து, கேட்டு போட்டார்களா என்றால், அதுவும் கிடையாது. திராவிட முன்னேற்றக் கழகம் இன்றைக்கு நாடாளுமன்றத்தில் மூன்றாவது இடத்தில் இருக்கிறது. தி.மு.க.வின் பிரதிநிதிகள் இருக்கிறார்களா என்றால் கிடையாது.**

**எனவே தலையாட்டி பொம்மைகளாக இருக்க வேண்டும் என்பதற்காக சில பேரை போட்டு, அவர்கள் நினைத்ததைச் சாதிக்க வேண்டும் என்பதற்காக ஒரு சர்வாதிகாரத்தோடு அந்த கமிட்டியை நியமித்து ஒரு சதித் திட்டத்தை ஏற்படுத்துவதற்காக இந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள்.**

அதை இன்றைக்கு தமிழ்நாட்டில் இருக்கும் எதிர்க்கட்சி அ.தி.மு.க.,- ஆளுங்கட்சியாக இருந்தபோது அந்தக் கொள்கையை எதிர்த்தார்கள். இப்போது எதிர்க்கட்சியாக இருக்கிறபோது, தி.மு.க. ஆளுங்கட்சியாக இருக்கிறபோது, அதே அ.தி.மு.க. அதை ஆதரிக்கிறது. இதை ஆதரிக்கிறதை பார்க்கிறபோது என்ன நினைக்கிறோம் என்றால், ஆட்டுத் தலையை வெட்டுவார்கள் அல்லவா, அதற்கு என்ன சொல்வார்கள்? ஆம், பலிகடா செய்வார்கள் அல்லவா, அந்த மாதிரிதான். தாம் பலிகடா ஆகப்போகிறது என்று ஆட்டுக்கு தெரியாது. அதனால் அ.தி.மு.க. பலிகடா ஆகப்போகிறது. இந்த சட்டம் நிறைவேறினால், தி.மு.க. மட்டுமல்ல, எந்த அரசியல் கட்சியும் நாட்டில் செயல்பட முடியாது. எனவே ‘One Man Show’ ஆகிவிடும். ஒரே நாடு - ஒரே தலைவர், ‘அதிபர்’ என்று அவரே அறிவித்து விடலாம். எனவே தேர்தலே கிடையாது. ஒரே நேரத்தில் ஒரே தேர்தல்தான் வைக்கப் போகிறோம் என்று சொல்கிறார்கள்.

**ஒரே நேரத்தில் தேர்தல் என்பது நடைமுறைக்கு சாத்தியமானதா?**

நான் கேட்கிறேன், கொஞ்சம் நினைத்துப் பாருங்கள். 2021-இல் தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் நடைபெற்றது. தேர்தல் நடந்து, நாம் ஆட்சிக்கு வந்து இரண்டரை வருடம் ஆகிறது. இன்னும் இரண்டரை வருடம் இருக்கிறது. எனவே நாடாளுமன்றத் தேர்தல் வருகிறபோது, ஒரே தேர்தல் நடத்த வேண்டும் என்றால் இந்த ஆட்சியைக் கலைத்து விடுவீர்களா? நாம் மட்டுமா, பக்கத்தில் இருக்கும் கேரள மாநிலம். அதேபோல மேற்குவங்கம். அங்கெல்லாம் கலைத்துவிடுவீர்களா? அவர்களுக்கெல்லாம் இன்னும் இரண்டரை வருடத்திற்கு மேல் ஆட்சி இருக்கிறது. ஏன் சில மாதங்களுக்கு முன்பு நடைபெற்ற கர்நாடக மாநிலம். அங்கு 40 சதவீதம் ஊழல் என்ற ஒரு சிறப்புப் பெயர் எடுத்து, பா.ஜ.க., படுதோல்வி அடைந்து, அங்கு காங்கிரஸ் தலைமையில் ஆட்சி அமைந்திருக்கிறது. எனவே அந்த ஆட்சியைக் கலைத்து விடுவீர்களா?

**சரி, அதுதான் போகட்டும். ஒரே நேரத்தில் தேர்தல் வைக்கிறீர்கள். அப்படி நாடாளுமன்றத்தோடு சட்டமன்றங்களுக்கும் தேர்தல் வைத்து, எங்காவது ஒரு மாநிலத்தில் மெஜாரிட்டி வராமல் போய்விட்டது என்றால், ஆட்சியை அமைக்க முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது என்றால் அப்போது என்ன செய்வீர்கள்? மறுபடியும் அடுத்த நாடாளுமன்றத் தேர்தல் வரும்வரை அந்தத் தேர்தலை நடத்தாமல் ஜனாதிபதி ஆட்சி நடத்தப் போகிறீர்களா? எனவே இப்படி ஒரு அசிங்கமான, கேவலமான ஒரு சதித் திட்டத்தைத் தீட்டி, எனவே ஒரு அதிபராகத் தான் இருக்க வேண்டும் என்பதற்காக இன்றைக்கு அந்த முயற்சிகளில் அவர்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்களே தவிர நாட்டைப் பற்றி அவர்கள் கவலைப்படவில்லை.**

**தேர்தல் செலவை மிச்சப்படுத்த வேண்டும், குறைக்க வேண்டும் என்ற ஒரு காரணத்தைச் சொல்கிறார்கள். நீங்கள் தேர்தல் செலவைக் குறைக்கிறீர்களோ, இல்லையோ நீங்கள் கொள்ளை அடிப்பதை முதலில் குறையுங்கள். சி.ஏ.ஜி. ரிப்போர்ட் என்ன கொடுத்திருக்கிறது? ரூ.7.5 லட்சம் கோடி!**

**இந்தியாவைக் காப்பாற்ற நாம் தயாராக வேண்டும்!**

நெடுஞ்சாலை போட்டதில், அதே நேரத்தில் டோல்கேட் வசூலில் - இப்படி பல நிலைகளில் கோடி கோடியாகக் கொள்ளை அடித்து, அதுவும் ஆதாரங்களோடு சி.ஏ.ஜி. அறிக்கை வெளியிட்டிருக்கிறது. அதைப் பற்றி கவலைப் படாமல், அதற்கு இதுவரை பதில் சொல்ல முடியாத நிலையில் ஒரு பிரதமர் இருக்கிறார் என்று சொன்னால், இப்படிப்பட்ட இந்த கொடுமையான ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். அதற்கு வரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் இந்தத் திருமண விழாவில், இது கழகக் குடும்பத்தில் நடைபெறும் திருமணம், நம்முடைய வீட்டு திருமணம். எனவே இந்தக் குடும்பத் திருமணத்தில் நாம் எடுத்துக் கொள்ள வேண்டிய உறுதிமொழியும், சபதமும் - ‘இந்தியாவைக் காப்பாற்ற நாம் இன்றைக்குத் தயாராக இருக்க வேண்டும்‘ என்று இந்த நேரத்தில் உங்களை எல்லாம் நான் அன்போடு கேட்டுக் கொண்டு, மணக்கோலம் பூண்டிருக்கும் மணமக்கள் எல்லா நன்மைகளையும் பெற்று சிறப்போடு வாழ்ந்திட வேண்டும்.

புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் எடுத்துச் சொல்லி இருக்கும், ‘வீட்டிற்கு விளக்காய், நாட்டிற்குத் தொண்டர்களாய்‘ இருந்து வாழுங்கள்... வாழுங்கள்... வாழுங்கள் என்று வாழ்த்துகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துரையில் குறிப்பிட்டார்.


4.09.2023
தூத்துக்குடி ஒருங்கிணைந்த மாவட்ட
திமுக இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம்
மற்றும் கழக முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கி
சிறப்பிக்கும் மாபெரும் நிகழ்ச்சிக்கு வருகை தரும்
கழக இளைஞர் அணி செயலாளர்
விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களே! வருக! வருக!!
மாண்புமிகு மீன் வளம் மீனவர் நலன் மற்றும்
கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர்
அனிதா R.ராதாகிருஷ்ணன்
J.ரமேஷ்
24வது வார்டு செயலாளர்
R.சிவ ஆனந்தி
திருச்செந்தூர் நகர்மன்றத் தலைவர்


4.09.2023
தூத்துக்குடி ஒருங்கிணைந்த மாவட்ட
திமுக இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம்
மற்றும் கழக முன்னோடிகளுக்கு பொற்கிழி
வழங்கி சிறப்பிக்கும் மாபெரும் நிகழ்ச்சிக்கு
வருகை தரும்
கழக இளைஞர் அணி செயலாளர்
விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
மாண்புமிகு
உதயநிதி ஸ்டாலின்
அவர்களை வணங்கி வருக வருக என வரவேற்கிறோம்...
அனிதா R.ராதாகிருஷ்ணன்
மாண்புமிகு மீன் வளம் மீனவர் நலன் மற்றும்
கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர்
T.P.பாலசிங்
உடன்குடி மேற்கு ஒன்றியச் செயலாளர்
உடன்குடி ஒன்றிய பெருந்தலைவர்
தூத்துக்குடி தெற்கு மாவட்ட திமுக


கலைஞர் 100
1924 - 2023
04.09.2023 திங்கட்கிழமை
ஒருங்கிணைந்த
தூத்துக்குடி மாவட்ட தி.மு.க
இளைஞரணி
செயல் வீரர்கள் கூட்டம் மற்றும்
கழக மூத்த முன்னோடிகளுக்கு
பொற்கிழி வழங்குதல் மற்றும்
மாவட்ட ஆட்சியரகத்தில்
பல்வேறு துறைகள் தொடர்பான
ஆய்வுக்கூட்டத்திற்கு
வருகை தரும்
கழக இளைஞர் அணிச் செயலாளர்
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களே வருக! வருக!
அன்புடன் வரவேற்று மகிழும்: பி.கீதாஜீவன் எம்.காம்.,பி.எட்.,
சமூக நலன் – மகளிர் உரிமை துறை அமைச்சர் – தூத்துக்குடி வடக்கு மாவட்ட செயலாளர்
தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க


நாள் : 04.09.2023
தூத்துக்குடி மாவட்டத்தில்
அரசுத் துறை திட்டங்களை ஆய்வு செய்வதற்கும்
கழக முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கி
மாவட்ட இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டத்தில்
பங்கேற்க வருகை தரும்
கழக இளைஞர் அணி செயலாளர்
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களே வருக! வருக!!
ARASU ARTS
உதயநிதிஸ்டாலின்
அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன்
மீன்வளம், மீனவர் நலன் (ம) கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்
தூத்துக்குடி தெற்கு மாவட்டச் செயலாளர்


தூத்துக்குடி மாவட்டத்தில்
அரசுத் துறை திட்டங்களை ஆய்வு செய்வதற்கும்
கழக முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கி
மாவட்ட இளைஞர் அணி
செயல் வீரர்கள் கூட்டத்தில்
பங்கேற்க வருகை தரும்
நாள் : 04.09.2023
ARASU ARTS
கழக இளைஞர் அணி செயலாளர்
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களே வருக! வருக!!
மீன்வளம், மீனவர் நலன் (ம) கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்
தூத்துக்குடி தெற்கு மாவட்டச் செயலாளர்
அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன்
அன்புடன்
S.R.S.உமரிஷங்கர் B.A.,
தி.மு.க. மாநில வர்த்தகர் அணி இணைச் செயலாளர்
அ.பிரம்மசக்தி M.E.,B.L.,
மாவட்ட ஊராட்சித் தலைவர் – தலைமை செயற்குழு உறுப்பினர்







# திருப்பூர் வடக்கு மாவட்ட பாக முகவர்கள் கூட்டம் (BLA-2)

## அவினாசி சட்டமன்ற தொகுதி

08.09.2023 காலை 10.00 மணி
இடம் : ராபா திருமண மண்டபம், அவினாசி

தலைமை : **க.செல்வராஜ்** எம்.எல்.ஏ.,
திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர்

வரவேற்புரை : **தொண்டாமுத்தூர் ரவி**
கோவை வடக்கு மாவட்டக் கழக செயலாளர்

ஒன்றிய செயலாளர்கள் **ஈ.ப.சிவப்பிரகாஷ்** - அவினாசி, **எஸ்.ஆர்.பழனிசாமி** - திருமுருகன்பூண்டி, **க.பால்ராஜ்** - சேவூர், **என்.பழனிசாமி** - அன்னூர் வடக்கு, **மு.தனபால்** - பொறுப்பாளர் அன்னூர் தெற்கு,
நகர செயலாளர் **மூர்த்தி (எ) கிருஷ்ணசாமி** திருமுருகன்பூண்டி,
பேரூர் கழக செயலாளர்கள் **வ.வசந்தகுமார்** - அவினாசி **இரா.பரமேஸ்வரன்** - அன்னூர்

சிறப்புரை : **ஆ.இராசா** எம்.பி.,
கழக துணை பொதுச் செயலாளர், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர்

## திருப்பூர் தெற்கு - திருப்பூர் வடக்கு சட்டமன்ற தொகுதி

தலைமை : **க.செல்வராஜ்** எம்.எல்.ஏ., திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர்
வரவேற்புரை : டி.கே.டி. **மு.நாகராசன்** திருப்பூர் தெற்கு மாநகர செயலாளர் **ந.தினேஷ்குமார்** மாநகராட்சி மேயர், திருப்பூர் வடக்கு மாநகர செயலாளர்

| தேதி | நேரம் | பகுதி | நிகழ்விடம் | பகுதி செயலாளர்கள் |
|---|---|---|---|---|
| 05.09.2023 | காலை 09.00 மணி | கருவம்பாளையம் பகுதி | மாவட்டக் கழக அலுவலகம் | மியாமி அ.அய்யப்பன் |
| 05.09.2023 | மாலை 04.00 மணி | ஆண்டிபாளையம் பகுதி, | மாவட்டக் கழக அலுவலகம் | ப.முருகசாமி |
| 05.09.2023 | மாலை 04.00 மணி | முத்தனம்பாளையம் பகுதி | மாவட்டக் கழக அலுவலகம் | எஸ்.என்.குமார் |
| 05.09.2023 | மாலை 04.00 மணி | வீரபாண்டி பகுதி | மாவட்டக் கழக அலுவலகம் | அ.கோவிந்தராஜ் |
| 06.09.2023 | காலை 09.00 மணி | வாலிபாளையம் பகுதி | மாவட்டக் கழக அலுவலகம் | மு.க.உசேன் |
| 06.09.2023 | மாலை 04.00 மணி | நல்லூர் பகுதி | மாவட்டக் கழக அலுவலகம் | மேங்கோ அ.பழனிசாமி |
| 07.09.2023 | மாலை 04.00 மணி | பாண்டியன் நகர் பகுதி | மாவட்டக் கழக அலுவலகம் | வெ.ஜோதி |
| 08.09.2023 | மாலை 04.00 மணி | கொங்குநகர் பகுதி | மாவட்டக் கழக அலுவலகம் | போலார் ரா.சம்பத்குமார் |
| 09.09.2023 | மாலை 04.00 மணி | அண்ணா காலனி பகுதி | மாவட்டக் கழக அலுவலகம் | மின்னல் அ.நாகராஜ் |
| 10.09.2023 | மாலை 04.00 மணி | வேலம்பாளையம் பகுதி | மாவட்டக் கழக அலுவலகம் | கொ.ராமதாஸ் |

## பல்லடம் சட்டமன்ற தொகுதி

தலைமை : **க.செல்வராஜ்** எம்.எல்.ஏ., திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர்
**க.நடராஜன்** அவைத்தலைவர் | **வக்கீல் எஸ்.குமார்** துணைச்செயலாளர் | **வெ.ராதாகிருஷ்ணன்** மாமன்ற உறுப்பினர்

| தேதி | நேரம் | ஒன்றியம் | நிகழ்விடம் | ஒன்றிய செயலாளர்கள் |
|---|---|---|---|---|
| 05.09.2023 | மாலை 04.00 மணி | பொங்கலூர் மேற்கு | ஆரியாஸ் ஹோட்டல் | பெ.அசோகன் |
| 06.09.2023 | காலை 10.00 மணி | பொங்கலூர் கிழக்கு | உகாயனூர் கழக அலுவலகம் | சா.பாலுசாமி |
| 06.09.2023 | மாலை 04.00 மணி | பல்லடம் கிழக்கு | ஒன்றிய கழக அலுவலகம் | ந.சோமசுந்தரம் |
| 07.09.2023 | காலை 10.00 மணி | பல்லடம் மேற்கு | ஒன்றிய கழக அலுவலகம் | சு.கிருஷ்ணமூர்த்தி |
| 07.09.2023 | மாலை 04.00 மணி | பல்லடம் நகரம் | நகரக் கழக அலுவலகம் | ந.ராஜேந்திரகுமார் |
| 08.09.2023 | மாலை 04.00 மணி | திருப்பூர் தெற்கு | அம்மன் கலையரங்கம் சுல்தான் பேட்டை மங்கலம் | பி.விஸ்வலிங்கசாமி |
| 09.09.2023 | காலை 10.00 மணி | திருப்பூர் வடக்கு | அம்மன் மண்டபம் பெருமாநல்லூர் | என்.விஸ்வநாதன் |

## மாவட்ட கழக நிர்வாகிகள்

**க.நடராசன்** அவைத்தலைவர்
வழக்கறிஞர் **சு.குமார்**, டிஜிட்டல் **எஸ்.சேகர்**, வழக்கறிஞர் **சி.கே.நந்தினி** துணைச்செயலாளர்கள்
**சு.சாமிநாதன்** பொருளாளர்

தலைமை செயற்குழு உறுப்பினர்கள் : **சி.கோவிந்தசாமி, எஸ்.சரவணநம்பி, பா.குணராஜ், ப.கு.கனகராஜ்**

பொதுக்குழு உறுப்பினர்கள் : **சலீம் (எ) அ.அப்துல் ரகுமான், எஸ்.எம்.மஸ்ஊது, ப.சண்முகசுந்தரம், செ.உமாமகேஸ்வரி, மு.முகமது ரபி, ஆர்.தங்கவேல், மு.நாச்சிமுத்து**

## தெற்கு மாநகர நிர்வாகிகள்

**ப.கணேசன்** அவைத்தலைவர்
**பி.ஆர்.செந்தில்குமார், ப.பாஸ்கரன், க.மகாலட்சுமி** துணைச்செயலாளர்கள்
**ஜி.முத்துக்கிருஷ்ணன்** பொருளாளர்

மாவட்ட பிரதிநிதிகள் : **ரா.முருகேஷ், ச.ராமகிருஷ்ணன், அ.சுப்பிரமணியம், பி.தங்கராஜ், எஸ்.பழனிசாமி, மு.க.அசேன், மு.முஹம்மது சபி, வி.பி.மகேந்திரன், இரா.தம்பி வடிவேல்**

## வடக்கு மாநகர நிர்வாகிகள்

**க. ஈஸ்வரமூர்த்தி** அவைத்தலைவர்
**அ.ராமசாமி, வே.செங்குட்டுவன், மு.தேவி** துணைச்செயலாளர்கள்
**அ.சரவணக்குமார்** பொருளாளர்

மாவட்ட பிரதிநிதிகள் : **சி.வெள்ளைச்சாமி, மூர்த்தி, அ.ஆறுச்சாமி, ச.மகேந்திரன், செ.முருகன், மா.தாமோதரன், மு.வேலுச்சாமி, சி.பாலசுப்பிரமணி, க.சுப்பிரமணியன்**

அந்தந்த பகுதி நிர்வாகிகள் அவர்கள் பகுதியில் நடைபெறும் பாக முகவர்கள் கூட்டத்தில் கலந்து கொள்வார்கள்

# திருப்பூர் வடக்கு மாவட்ட தி.மு.க.

## தி.மு.க. மாணவர் அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்! (மூன்றாவது பட்டியல்)

### தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன், எம்.எல்.ஏ., அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. மாணவர் அணி அணியின் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**விருதுநகர் வடக்கு மாவட்டம்**

அமைப்பாளர் - **மு. கருப்புராஜா,** பி.எஸ்.சி., நெ.1/59, எஸ். தோப்பூர், காரியாபட்டி, விருதுநகர்.

துணை அமைப்பாளர்கள் - த. பாலமுருகன், பி.பி.ஏ., நெ.33, ஏசுநாதர் தெரு, மல்லாங்கிணர், காரியப்பட்டி, விருதுநகர். மு. தெய்வநாயகம், பி.காம்., வடக்குத் தெரு, கோவிந்தநல்லூர், விருதுநகர். த. ரவிவர்மா, பி.டெக்., நெ.1/42, காளியம்மன் கோவில் தெரு, செங்குன்றாபுரம், விருதுநகர். ஜெ. திவாகர், பி.இ., நெ.414, பராசக்தி காலனி, சிவகாசி, விருதுநகர். சி. ஸ்ரீ உதயசூர்யா, எம்.பி.ஏ., நெ.138/3-பி, சோலை காலனி, பெரியகருப்பன் ரோடு, சிவகாசி, விருதுநகர்.

**கோவை வடக்கு மாவட்டம்**

அமைப்பாளர் - **செ. அந்தோணிராஜ், டி.ஐ.டி.,** நெ.94/17, ஆர். வி. நகர், புதுப்புதூர் ரோடு, எஸ்.ஆர்.கே.வி. அஞ்சல், பெரியநாயக்கன்பாளையம், கோவை - 641 020.

துணை அமைப்பாளர்கள் - ஞா. சிவக்குமார், எம்.பி.ஏ., நெ.2/69, கன்னிமார் கோயில் வீதி, தொண்டாமுத்தூர், தேவராயபுரம், கோவை - 641 109. இ.எம்.எஸ். ரபிதின், பி.ஏ., நெ.15/6, மதராவுத்தர் சந்து, சிறுமுகை ரோடு, மேட்டுப்பாளையம், கோவை - 641 301. சா. தினேஷ்குமார், பி.இ., நெ.11/29, பாரீஸ் நகர், சித்ரா, சிவில் ஏரோட்ரோம் போஸ்ட், கோவை - 641 014. எஸ். சரவணகுமாரி (எ) சரண்யா, பி.டெக்., நெ.10, பாரதிதாசன் வீதி, பாலன் நகர், கவுண்டம்பாளையம், கோவை - 641 030. ரா. மனோஜ்குமார், பி.எஸ்.சி., எம்.ஐ.பி., நெ.43/58ஏ, அய்யாவு பண்ணாடி வீதி, சொக்கம்புதூர், கோவை - 641 039.

**கடலூர் மேற்கு மாவட்டம்**

அமைப்பாளர் - **க. சதீஷ்குமார், டி.சி.டி.,** நெ.297/51, காமராஜர் நகர், ஆலடி ரோடு, விருத்தாசலம், கடலூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - சி. சதாசிவம், எம்.காம்., நெ.01, புதுத் தெரு, புதுப்பேட்டை, கடலூர் மாவட்டம். வி. சிவநேசன், எம்.ஏ., எம். எட்., எல்.எல்.பி., சன்னாசி பேட்டை, பாலூர் அஞ்சல், பண்ருட்டி தாலுக்கா, கடலூர் மாவட்டம் - 607 102. வி. சேதுபதி, பி.இ., நெ.205, தெற்கு தெரு, கீழிருப்பு அஞ்சல், பண்ருட்டி வட்டம், கடலூர் மாவட்டம் - 607 103. செ. பிலோமின், பி.ஏ., பி.எட்., நெ.பி-6, கவை தெரு, வட்டம்-3, நெய்வேலி, கடலூர் மாவட்டம். க. செல்வமணி, எம்.ஏ., நெ.13/8, மணிமேகலை தெரு, பெரியார் நகர், விருத்தாசலம், கடலூர்.

**ஈரோடு தெற்கு மாவட்டம்**

அமைப்பாளர் - **ராசு (எ) எஸ். கோபால், பி.இ.,** நெ.9, சரளை, பொன்முடி அஞ்சல், பெருந்துறை, ஈரோடு.

துணை அமைப்பாளர்கள் - எஸ்.பி. சதீஷ், பி.டெக்., நெ.31, முதல்வீதி, காந்தி நகர் காலனி, ஈரோடு - 638 009. பி.என்.எம்.என். கதிரவன், எம்.பி.ஏ., நெ.51, வலையங்கார வீதி, ஈரோடு. கே.எம். ராஜா, பி.ஏ., நெ.5/834, ஸ்ரீ சக்தி டெக்ஸ், தொலைபேசி நிலைய வீதி, காளிங்கராயன்பாளையம், பவானி, ஈரோடு - 638 301. சி.ஏ. கார்த்திகேயன், டி.எம்.இ., நெ.153, பழைய கரூர் ரோடு, கோணவாய்க்கால், ஈரோடு - 2. எ. மெஹராஜ் அஸ்கர் அலி, பி.காம்., நெ.80, சி.எஸ். நகர் விரிவாக்கம், வீரப்பன்சத்திரம், ஈரோடு - 4.

**விழுப்புரம் வடக்கு மாவட்டம்**

அமைப்பாளர் - **எம்.யூ. பிரசன்னா, பி.ஏ.,** நெ.3/144, மாரியம்மன் கோவில் தெரு, பொன்னங்குப்பம் அஞ்சல், செஞ்சி வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - ஏ. ஞானசேகரன், எம்.பி.ஏ., நெ.106/107, குளத்து தெரு, சொக்கனந்தல் கிராமம், பாலப்பாடி அஞ்சல், செஞ்சி தாலுக்கா, விழுப்புரம் மாவட்டம். ம. லோகநாதன், எம்.ஏ., பி.எட்., நெ.46, மாரியம்மன் கோவில் தெரு, நொளம்பூர் அஞ்சல், திண்டிவனம், விழுப்புரம். ஜி. சுபாஷ் சந்திரபோஸ், பி.இ., எம்.பி.ஏ., நெ.28/16ஏ, காளியம்மன் கொள்ளை வீதி, திண்டிவனம் - 604 001. தி. மதிவாணன், எம்.எஸ்.சி., பி.எட்., பி.எல்., நெ.206, மாரியம்மன் கோவில் தெரு, கொரலூர் கிராமம், மயிலம் அஞ்சல், திண்டிவனம். ஷா. பெனாசீர், எம்.இ., நெ.40, திண்டிவனம் சாலை, செஞ்சி வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

**திருவாரூர் மாவட்டம்**

அமைப்பாளர் - **சா. பகலவன், பி.டெக்.,** மேலத்தெரு, புள்ளவராயன் குடிக்காடு, நீடாமங்கலம், திருவாரூர்.

துணை அமைப்பாளர்கள் - மதி. முத்துகுமார், டி.சி.இ., நெ.7, ஆதிநாயக்கன் பாளையம் தெரு, மன்னார்குடி - 614 001. மதி. நெல்சன் மண்டேலா, பி.இ., மாதா கோவில் தெரு, ஓடாச்சேரி, சூரனூர் அஞ்சல், திருவாரூர் வட்டம் - 610 101. ஜா. நூரூல் அமீன், பி.இ., நெ.2/64, அக்ரஹார தெரு, வாழ்க்கை & அஞ்சல், நன்னிலம், திருவாரூர். வை. யோகபாலன், பி.காம்., எம்.பி.ஏ., நெ.584, தெற்கு தெரு, மழவராயநல்லூர், திருவண்டுதுறை, மன்னார்குடி, திருவாரூர். எஸ். சகுந்தலா தேவி, பி.எஸ்.சி., பி.எட்., நெ.43பி, ராமகே ரோடு, திருவாரூர் - 610 001.

**கோவை மாநகர் மாவட்டம்**

அமைப்பாளர் - **வி. சிவபிரகாஷ், பி.எஸ்.சி.,** நெ.7இ, நேதாஜி நகர், கே.ஆர்.புரம், ஆவாரம்பாளையம், கோவை - 641 006.

துணை அமைப்பாளர்கள் - எஸ். பாண்டி, பி.எஸ்.சி., எல்.எல்.பி., நெ.129, அப்துல்கலாம் வீதி, பாலாஜி நகர், பொம்மண்ணம்பாளையம், பாரதியார் பல்கலைக்கழகம் அஞ்சல், கோவை - 641 046. ஆர். நந்தகுமார், பி.பி.ஏ., நெ.300, இடையர் வீதி, கோயம்புத்தூர். பி. பைந்தமிழன், பி.இ., நெ.10/1, என்.கே.ஜி. நகர், நீலிக்கோணம்பாளையம் அஞ்சல், கோவை - 33. ரா. ஸ்ருதிப்பிரியா, பி.இ., எம்.பி.ஏ., எல்.எல்.பி., நெ.13, பாலமுருகன் வீதி, மகேஸ்வரி நகர், பீளமேடு, தண்ணீர்பந்தல், கோவை - 04. பா. ஜெகதீசன், பி. எஸ்.சி., நெ.61சி/2, டாக்டர் ராதாகிருஷ்ணன் வீதி, சீரனாயக்கன்பாளையம், சுகர்கேன் அஞ்சல், கோயம்புத்தூர்.

**மயிலாடுதுறை மாவட்டம்**

அமைப்பாளர் - **வி.எஸ்.என். செந்தில், பி.எஸ்.சி., எல்.எல்.பி.,** நெ.4/144, மகாராஜபுரம் தெரு, 6, கீழையூர், தரங்கம்பாடி - 609 304.

துணை அமைப்பாளர்கள் - டி. சந்தோஷ், எம்.பி.ஏ., நெ.20, ஹாஜியார் நகர், கூறைநாடு, மயிலாடுதுறை. தா. முத்துக்குமார், பி. எஸ்.சி., எல்.எல்.பி., நெ.39, தேர் வடக்கு வீதி, சீர்காழி - 609 110. ஆர். ராஜ்குமார், டி.இ.சி.இ., மெயின் ரோடு, தாழஞ்சேரி, கொற்கை, மயிலாடுதுறை. ஆர். ராகுல்வர்மா, டி.எம்.இ., நெ.96, தெற்கு தெரு, கோடிமங்கலம், எஸ். புதூர், குத்தாலம் வட்டம். இ. கிருத்திகா, எம். எஸ்.சி., எம்.பி.ஏ., நெ.39பி3, தனியூர் சாலியத் தெரு, கூறைநாடு, மயிலாடுதுறை அஞ்சல்.

**திருச்சி வடக்கு மாவட்டம்**

அமைப்பாளர் - **சே. வருண்ராஜ், எம். பார்ம்.,** நெ.61/10, வடக்கு கொட்டம், பெருகனூர், ஊரக்கரை, தா.பேட்டை, முசிறி வட்டம், திருச்சி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - டி. அகத்தீஸ்வரன், பி.பி.ஏ., நடுத்தெரு, காடுவெட்டி அஞ்சல், தொட்டியம் வட்டம், திருச்சி மாவட்டம். ர. விஜயகுமார், பி.ஏ., நெ.4/9, மெயின் ரோடு, வைரிசெட்டிபாளையம், துறையூர் வட்டம், திருச்சி மாவட்டம். மா. சிவக்குமார், பி.எஸ்.சி., நெ.11, சிங்காரவேல் நகர், சமயபுரம், மண்ணச்சநல்லூர் வட்டம், திருச்சி மாவட்டம். ந. பிரபாகரன், பி.இ., நெ.3/8, பெருமாள் கோவில் தெரு, ரங்கநாதபுரம், துறையூர் வட்டம், திருச்சி மாவட்டம். எஸ். ப்ரீத்திகா, பி.எஸ்.சி., நெ.14, 2வது தெரு, காந்தி நகர், முசிறி வட்டம், திருச்சி மாவட்டம்.

**காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம்**

அமைப்பாளர் - **மு. குணசேகரன், எம்.ஏ., பி.எட்.,** குரும்பரை, பொலம்பாக்கம் அஞ்சல், செங்கல்பட்டு மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - தி. இராம்பிரசாத், நெ.68, முதல் தெரு, அசோக் நகர், காஞ்சிபுரம் - 631 502. ஏ.வி. சுரேஷ்குமார், எம்.எஸ். சி., பி.எட்., எல்.எல்.பி., நெ.3, பாரதி நகர், சேர்காடு, வாலாஜாபாத். சரளா தனசேகரன், எம்.பி.ஏ., நெ.5, பார்த்தசாரதி குறுக்கு தெரு, மதுராந்தகம். எஸ். தமிழ்செல்வன், டி.இ.இ.இ., நெ.72, பருத்திகுளம், கருப்படிதட்டடை, காஞ்சிபுரம். சு. சரண்ராஜ், பி.இ., எம்.டெக்., விளம்பூர் கிராமம் மற்றும் அஞ்சல், இடைக்கழிநாடு.

**நாமக்கல் மேற்கு மாவட்டம்**

அமைப்பாளர் - **அ. பாலசுப்ரமணியன், பி.எஸ்.சி.,** நெ.13/256-1, முத்தான்காடு, எலச்சிபாளையம், திருச்செங்கோடு, நாமக்கல்.

துணை அமைப்பாளர்கள் - ஐயப்பன் (எ) பெருமாள் 45பி, மேட்டுக்காடு, சி.என். பாளையம், குமாரபாளையம், நாமக்கல். ச. தங்கமணி, பி.பி.எம்., நெ.24/25ஏ, காந்திபுரம் இரண்டாவது வீதி, 18அடி ரோடு, பள்ளிப்பாளையம், நாமக்கல் மாவட்டம். ச. ஸ்ரீமதன், எம்.காம்., நெ.20/55, காவேரி சாலை, பொத்தனூர், பரமத்திவேலூர், நாமக்கல். உ. லாவண்யா, எம்.காம்., நெ.46, நெசவாளர் காலனி, திருச்செங்கோடு, நாமக்கல். ந. ராகேஸ்கண்ணன், பி.இ., தாஜ்நகர், காடச்சநல்லூர், குமாரபாளையம், நாமக்கல்.

**நாமக்கல் கிழக்கு மாவட்டம்**

அமைப்பாளர் - **ப. சத்தியசீலன், பி.இ.,** நெ.5/435, கல்லமடை காடு, 85ஆர், கொமாரப்பாளையம், குருசாமிபாளையம், ராசிபுரம் வட்டம், நாமக்கல் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - நா. கௌதம் ராம், பி.இ., நெ.5/312, ராஜீவ் காந்தி நகர், சேலம் ரோடு, நாமக்கல் - 637 001. எஸ். கார்த்திகேயன், பி.காம்., நெ.சி-162, அன்பு நகர் குடியிருப்பு, மோகனூர் ரோடு, நாமக்கல் மாவட்டம் - 637 001. சி. சக்திவேல், எம்.இ., அனந்தகவுண்டம்பாளையம், ஒட்டன்காடு அஞ்சல், இராசிபுரம் வட்டம், நாமக்கல் மாவட்டம் - 637 408. சி. மணிகண்டன், எம்.எஸ்.சி., நெ.14, இந்திரா நகர், ஆர்.புதுப்பாளையம் ரோடு, இராசிபுரம் அஞ்சல் & தாலுக்கா, நாமக்கல் மாவட்டம் - 637 408. பி. சங்கீதா, பி. டெக்., நெ.1/345, வி.ஐ.பி. நகர், முதலைப்பட்டி, நாமக்கல் - 3.

**இராணிப்பேட்டை மாவட்டம்**

அமைப்பாளர் - **எஸ். வினோத், பி.எஸ்.சி.,** நெ.19பி/6, கெல்லிஸ் ரோடு, நவல்பூர், இராணிப்பேட்டை.

துணை அமைப்பாளர்கள் - பி. மார்க்கண்டேயன், எம்.எஸ்.சி., பி.எல்., நெ.1/35, மாரியம்மன் கோவில் தெரு, அகவலம் கிராமம், ரெட்டிவலம் அஞ்சல், நெமிலி வட்டம், இராணிப்பேட்டை. பி. ஆனந்தன், பி.எல்.எஸ்., நெ.13, அந்தோணி அம்மாள் தெரு, ஆற்காடு. மு. அருண்குமார், எம்.பி.ஏ., நெ.1/187, துளசி மாட வீதி, வாலாஜா. சி. சங்கர், ஐ.டி.ஐ., நெ.7, ரோட்டுத் தெரு, சயனபுரம் கிராமம் & அஞ்சல், நெமிலி வட்டம், இராணிப்பேட்டை. புவனேஸ்வரி, பி.எஸ்.சி., டி.டி.எட்., நெ.4/108, ஆற்காடு சாலை, கே. வேலூர், ஆற்காடு, இராணிப்பேட்டை.

**திருநெல்வேலி கிழக்கு மாவட்டம்**

அமைப்பாளர் - **அலெக்ஸ் அப்பாவு, பி.இ.,** நெ.14/90ஏ, மெயின் ரோடு, லெப்பை குடியிருப்பு, மகேந்திரகிரி அஞ்சல், திருநெல்வேலி மாவட்டம் - 627 133.

துணை அமைப்பாளர்கள் - சு. பிரபாகரன், பி.ஏ., பி.எல்., நெ.120/21, அம்பலவாணபுரம் மெயின் ரோடு, விக்கிரமசிங்கபுரம், திருநெல்வேலி. எஸ்.கே. சீனிதாஸ், பி.ஏ., 3/90, வடக்கு தெரு, தோட்டாக்குடி, நாங்குநேரி, திருநெல்வேலி. ஆ. லெட்சுமணன், பி. காம்., எம்.பி.ஏ., நெ.95, இராதாபுரம் ரோடு, வள்ளியூர், திருநெல்வேலி. எஸ். ராஜதுரை, பி.ஏ., பி.எல்., நெ.36பி, கீழகண்டளவு தெரு, சேரன்மகாதேவி, திருநெல்வேலி - 627 414. ஐ. வனிசுதா, டி. நர்சிங்., நெ.4/42, தெற்குத் தெரு, மாறன்குளம், திருநெல்வேலி மாவட்டம்.

**தேனி வடக்கு மாவட்டம்**

அமைப்பாளர் - **எஸ்.பி.டி. ஸ்டீபன், எம்.காம்., பி.எல்.,** நெ. 6/3/1, பஜனை மடம் தெரு, கெங்குவார்பட்டி, பெரியகுளம், தேனி - 625 203.

துணை அமைப்பாளர்கள் - கு. நிபந்தன், பி.ஏ., நல்லம்மாள் கோவில் தெரு அருகில், வடக்கு தெரு, தேவதானப்பட்டி. ம. சுதந்திரம், பி.ஏ., பி.எட்., காளியம்மன் கோவில் தெரு, பாரஸ்ட் ரோடு, தேனி. சீ. ராதாகிருஷ்ணன், டி.எம்.இ., தர்மாபுரி மெயின் ரோடு, கோட்டூர். பொ. தங்கப்பாண்டியன், பி.எஸ்.சி., பி.எட்., மெயின் ரோடு, பாலார்பட்டி, போடிநாயக்கனூர். எ. சபிதா பானு, பி.இ., நெ.2/56, காமராஜர் பாண்டியர் ரோடு, போடிநாயக்கனூர்.

**வேலூர் மாவட்டம்**

அமைப்பாளர் - **டி. சுந்தர், எம்.பி.ஏ., பி.எல்.,** நெ. 137/ஏ, ஆர். எஸ். நகர், குடியாத்தம்.

துணை அமைப்பாளர்கள் - வி. விக்ரம், பி.ஏ., நெ.30/23, பங்கரிஷிகுப்பம் கிராமம், பொகளூர் அஞ்சல், குடியாத்தம் ஒன்றியம், வேலூர் மாவட்டம். இரா. பிரபாகரன், எம்.ஏ., எம்.பில்., பி.எச்.டி., நெ.9/1, விவேகானந்தர் தெரு, சேண்பாக்கம், வேலூர். எம். ஹரிநாத், பி.எஸ்.சி., எம்.எல்., நெ.82, கோவில் தெரு, மசிகம் கிராமம் & அஞ்சல், பேர்ணாம்பட்டு - 632 810. அரவிந் அசோகன், எம்.பி.ஏ., எல்.எல்.பி., நெ.183, முத்தமிழ் வீதி, காந்தி நகர், வேலூர். பி. ஸ்ரீதேவி, பி.ஏ., டி.டி.எட்., கருங்காலி, வளையல்காரபட்டி அஞ்சல், வழி மாதனூர், அணைக்கட்டு வட்டம்.

**சென்னை வடகிழக்கு மாவட்டம்**

அமைப்பாளர் - **எம்.எம். செந்தில்,** பி.காம்., நெ. 32ஏ, சன்னதி தெரு, தேரடி, திருவொற்றியூர், சென்னை - 19.

துணை அமைப்பாளர்கள் - டி. லிவிங்ஸ்டன் ராஜ்குமார், எம்.எஸ். சி., எம்.ஏ., எல்.எல்.பி., நெ.27/3, ராஜகுமாரி இல்லம், முதல் தெரு, காமராஜ் நகர், எண்ணூர், சென்னை. எம்.எஸ். தினேஷ்வேலன் 24/6, எஸ்.பி. கோயில் 3வது தெரு, திருவொற்றியூர், சென்னை - 19. பி. நந்தகுமார், பி.எஸ்.சி., பி.பி.ஏ., நெ.62/41/15, வசந்த நகர், 2வது தெரு, தாங்கல், திருவொற்றியூர், சென்னை - 19. லிங்கேஷ் பரந்தாமன், எம்.ஏ., எம்.பில்., பி.எட்., பி.எச்.டி., நெ.3/3, அம்பேத்கர் தெரு, கீழ்க்கொண்டையார் காலனி, கரலப்பாக்கம், திருவள்ளூர். ரா. ராதிகா, பி.ஏ., பி.எல்., நெ.1/101, பெருமாள் கோயில் தெரு, கும்மனூர், சோழவரம், சென்னை - 51.

**மதுரை வடக்கு மாவட்டம்**

அமைப்பாளர் - **எஸ். ஆதிசங்கர், பி.ஏ., எல்.எல்.பி.,** (ஹானர்ஸ்) நெ. 2-210, வீ. மீனாட்சிபுரம், வெளிச்சநந்தம், மதுரை.

துணை அமைப்பாளர்கள் - பி. கதிரவன், பி.ஏ., பி.எல்., நெ.2-133, சென்டரல் எக்ஸ்சைஸ் காலனி, ஐய்யர் பங்களா. பி. முரளிதரன், எம்.இ., நெ.12-135, பாலமேடு, வாடிப்பட்டி, மதுரை. கே. கேசவன், டி.எம்.இ., நெ.5-91, பூண்டி அப்பன் திருப்பதி, வெள்ளியங்குன்றம், மதுரை. ஆர். சரவணன், பி.இ., நெ.1இ/1-187, மீனாட்சி அம்மன் நகர், மதுரை. பி. அபித்தா, பி.இ., நெ.59, ஆ.கோசாகுளம், ஆனையூர், மதுரை - 17.

**திருநெல்வேலி மத்திய மாவட்டம்**

அமைப்பாளர் - **ச. பாலசுப்பிரமணியன், பி.காம்., பி.எல்.,** நெ.3/23, கீழக்கல்லூர், நடுக்கல்லூர், திருநெல்வேலி.

துணை அமைப்பாளர்கள் - எம்.ஏ. ரம்ஸான் அலி, பி.காம்., நெ. 169ஏ, காஜா நாயகம் தெரு, மேலப்பாளையம், திருநெல்வேலி. செ. ஆறுமுக ராஜா, பி.இ., எம்.எஸ்.சி., நெ.73, மத்திய தெரு, பல்லிக்கோட்டை, திருநெல்வேலி. மு. வினோத், டி.எம்.இ., நெ.8/151, சர்ச் தெற்கு தெரு, துறையூர், தங்கை கொண்டான், திருநெல்வேலி - 627 352. ப. முத்துகிருஷ்ணராஜா, பி.ஏ., நெ.156/1ஏ, அம்பேத்கர் நகர், பழைய பேட்டை, திருநெல்வேலி - 627 008. பா. அஸ்வின் பேபி, பி.ஏ., எல்.எல்.பி., நெ.19, மங்களா குடியிருப்பு, தச்சநல்லலூர், திருநெல்வேலி.

**கடலூர் கிழக்கு மாவட்டம்**

அமைப்பாளர் - **ஆர். சத்தியநாராயணன், பி.காம்.,** நெ.117, ராஜகோபால் மோகன் நகர், இந்திராநகர் இறக்கம், சீர்காழிமெயின் ரோடு, சிதம்பரம் வட்டம், கடலூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - ஜெ. ஜெயபிரகாஷ், பி.டெக்., நெ.23, மாரியம்மன் கோவில் தெரு, கே.புதூர், காரைக்காடு அஞ்சல், கடலூர் - 607 005. சீ. ராதாகிருஷ்ணன், எம்.எல்.ஐ.எஸ்., எம்.பி.ஏ., வலசக்காடு அஞ்சல், திருமுட்டம் வட்டம், பள்ளிஓடை தெரு, வலசக்காடு - 608 701. கடலூர் மாவட்டம். கே.எஸ்.ஆர். பாலாஜி, பி.இ., நெ.150, போடி செட்டித் தெரு, திருப்பாதிரிப்புலியூர், கடலூர் - 607 002. வி. பகலவன், பி.இ., நெ.107, தெற்கு தெரு, கரை மேடு, பாகூர் அஞ்சல், கடலூர் வட்டம். சா. திவ்யா, எம்.ஏ., பி.எட்., நெ.135, மாரியம்மன் கோவில் தெரு, குமாரக்குடி அஞ்சல், திருமுட்டம் வட்டம், கடலூர் மாவட்டம்.

**கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம்**

அமைப்பாளர் - **எம். கண்ணன்,** நெ.3/4-63, பாரதி நகர், அரசனட்டி ஓசூர், கிருஷ்ணகிரி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - சு. வருண்குமார், டி.எம்.இ., குட்டப்பள்ளி கிராமம், கோடிப்பள்ளி அஞ்சல், கிருஷ்ணகிரி மாவட்டம். நிஷார் அகமத், எம்.பி.ஏ., நெ.1/165, ராமாபுரம், கிருஷ்ணகிரி மாவட்டம். பி. ராகவேந்திரன், பி.எஸ்.சி., நெ.1/45, வி.மாதேப்பள்ளி கிராமம் & அஞ்சல், வேப்பனப்பள்ளி ஒன்றியம், கிருஷ்ணகிரி மாவட்டம். கு. செல்வம், எம்.காம்., நெ.எச்.73/70, நியு டெம்புள் லேண்ட் அட்கோ, ஒசூர், கிருஷ்ணகிரி மாவட்டம். மோ. யஷ்யஷ்வினி, பி.ஏ., எல்.எல்.பி., நெ.1-1/18, கிருஷ்ணா நகர், முதல் தெரு, ஒசூர், கிருஷ்ணகிரி மாவட்டம்.

**திருச்சி மத்திய மாவட்டம்**

அமைப்பாளர் - **ந. சதீஸ்குமார்,** நெ.94, ஈஞ்சூர், பள்ளிவிடை அஞ்சல், இலால்குடி தாலுக்கா, திருச்சி.

துணை அமைப்பாளர்கள் - சா. அப்துல் காதர், எம்.பி.ஏ., நெ.159, குத்பிஷா நகர், தென்னூர், திருச்சி. கா. விஸ்வநாத் பிரதாபன், பி.இ., நெ.5/122, பெரியார் நகர், மேலவாளாடி, இலால்குடி, திருச்சி. க. விஜயகுமார், எம்.எஸ்.சி., எம்.பில்., நெ.எஸ்-4, நோவா அபார்ட்மெண்ட், முதல் தளம், மரியா கார்டன், புத்தூர். கே.எஸ். ஜெயேந்திரன், எம்.பி.ஏ., நெ.2பி/9, விருப்பாச்சிபுரம், சுண்ணாம்புக்காரத் தெரு, உறையூர், திருச்சி. பா. ரம்யபிரியா, எம். பி.ஏ., பழைய அக்ரஹாரம், தேனூர், திருச்சி.

"அண்ணா அறிவாலயம்" சென்னை - 18.

**சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ.,**
செயலாளர்
தி.மு.க. மாணவர் அணி





நாகை மாவட்ட தி.மு.க. சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்துரையாடல் கூட்டம் நாகை யாழிசை திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் சட்டத்துறை அமைச்சர் எஸ்.இரகுபதி பேசினார். உடன் நாகை மாவட்டக் கழக செயலாளர் என்.கௌதமன், மாநில விவசாய அணி துணை தலைவர் எஸ்.கே.வேதரத்தினம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இல.மேகநாதன், ப.கோவிந்தராசன், மாநில விவசாய அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், மாவட்டக் கழக பொருளாளர் மு.லோகநாதன், துணைச் செயலாளர்கள் சோ.ரவிச்சந்திரன், கற்பகம், மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் உள்ளனர்.

## தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி

### விழுப்புரம் வடக்கு மாவட்ட துணை அமைப்பாளர் நியமனம்

### அணிச்செயலாளர் தயாநிதிமாறன் எம்.பி., அறிவிப்பு

விழுப்புரம் வடக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட ஜி.ரிஸ்வான் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக ஷேக்வாகித், பி.எஸ்சி., (2226, கபூர் சாகிப் தெரு, பள்ளியம்பட்டு கிராமம், செஞ்சி - 604 205) அவர்கள் மாவட்ட துணை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார். ஏற்கனவே நியமிக்கப்பட்ட நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணாஅறிவாலயம்"
சென்னை 18.
நாள் : 03.09.2023.

**தயாநிதிமாறன் எம்.பி.,**
செயலாளர்,
தி.மு.க.விளையாட்டு மேம்பாட்டுஅணி

## தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி

### விழுப்புரம் வடக்கு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் நியமனம்

### அணிச்செயலாளர் டி.ஆர்.பி.ராஜா அறிவிப்பு

விழுப்புரம் வடக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்ட கே.எஸ். எம்.மொக்தியார் அலி அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக ரோமியன், பி.இ., (3, மாரியம்மன் கோவில் தெரு, பெரும்புகை, செஞ்சி வட்டம், விழுப்புரம் மாவட்டம்) அவர்கள் விழுப்புரம் வடக்கு மாவட்ட ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணாஅறிவாலயம்"
சென்னை 18.
நாள் : 03.09.2023.

**டி.ஆர்.பி. ராஜா,**
செயலாளர்,
தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி

## ஆத்தூர் - கோனூர் ஊராட்சியில்

# சங்கான்குளத்தை சொந்தச் செலவில் தூர்வாரிக் கொடுக்கும் பணி!

### அமைச்சர் ஐ. பெரியசாமிக்கு கிராம மக்கள் பாராட்டு!

ஆத்தூர் , செப்.4-

கோனூர் ஊராட்சியில் 41ஏக்கர் நிலப்பரப்புள்ள சங்கான்குளத்தை தனது சொந்த செலவில் தூர்வாரி கொடுக்கும் ஊரகவளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு விவசாயிகள், கிராம மக்கள் பாராட்டு தெரிவித்துள்ளனர். கோனூர், கரிசல்பட்டி ஊராட்சி, கசவனம்பட்டி, தருமத்துப் பட்டி, அனுமந்தராயன் கோட்டை, குட்டத்துப் பட்டி ஊராட்சி கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் பயன் பெறுகிறார்கள்.

திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார்சத்திரம் ஒன்றியம் கோனூர் ஊராட்சியில் சங்கான்குளம் உள்ளது சுமார் 41ஏக்கர் (16.43ஹெக்டேர்) நிலப்பரப்புள்ள இந்த குளத்தை தூர்வாரி கொடுக்கவேண்டுமென்று ஊராட்சிமன்ற தலைவர் வெள்ளதாய் தங்கபாண்டியன் தலைமையில் விவசாயிகள் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களிடம் கோரிக்கை மனு கொடுத்தனர். கோரிக்கை மனுக்களை பெற்ற உடனே தனது சொந்த செலவில் சங்கான் குளத்தை தூர்வாரி கொடுப்பதாக உறுதியளித்தார். அதன்படி சங்கான்குளத்தில் தூர்வாரும் பணி கடந்த ஒருவார காலமாக நடை பெற்று வருகிறது. கோனூர், கரிசல்பட்டி ஊராட்சி, கசவனம்பட்டி, தருமத்துப் பட்டி, அனுமந்தராயன் கோட்டை, குட்டத்துப் பட்டி ஊராட்சி கிராமங்களை சேர்ந்த குயவ நாயக்கன்பட்டி, மேலதிப்பம் பட்டி, கீழதிப்பம்பட்டி, அலவாச்சிபட்டி, மைலாப்பூர், குட்டத்து ஆவாரம் பட்டி, போடம் பட்டி, பழைய கன்னிவாடி, வட்டப்பாறை, காரமடை, உட்பட 50க்கும் மேற்பட்ட கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் டிராக்டர் மூலம் சங்கான்குளத்திற்கு வந்து இலவசமாக வண்டல் மண்ணை எடுத்து சென்று தங்களுடைய விளை நிலங்களுக்கு பயன்படுத்தி வருகின்றனர். இதனால் சுமார் 40க்கும் மேற்பட்ட கிராமங்களை சேர்ந்த நூற்றுக் கணக்கான விவசாயிகள் பயன்பெற்று வருகின்றனர்.

இதுகுறித்து கோனூர் ஊராட்சி மன்ற தலைவர் வெள்ளத்தாய் தங்கபாண்டியன் கூறுகையில் ரெட்டியார் சத்திர ஒன்றிய பகுதி விவசாயிகளின் பாதுகாவலராக இருக்கும் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி எங்கள் பகுதி விவசாயி களின் நலன் கருதி தனது சொந்த செலவில் சுமார் 30 லட்சம் மதிப்பில் சங்கான் குளத்தை தூர்வார உத்தரவிட்டதால் இன்று விவசாயிகள் இலவசமாக வண்டல் மண்ணை எடுத்து வருகிறார்கள். ஊராட்சி நிர்வாகம் சார்பாக நாங்கள் முறையாக வரிசை முறைப்படி விவசாயிகள் குளத்து வண்டல் மண்ணை எடுத்து செல்ல நடவடிக்கை எடுத்து வருகின்றனர். கொட்டும் மழையிலும் விவசாயிகள் வண்டல் மண்ணை எடுத்து செல்கிறார்கள் என்றார்.

## வங்கக்கடலில் புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி

சென்னை, செப் 4-

அடுத்த 24 மணி நேரத்திற்குள் வடக்கு வங்க கடல் பகுதியில் புதிய காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகும் என்றும், இதனால் தமிழகத்தில் அடுத்த 7 நாட்களுக்கு மழை பெய்ய வாய்ப்பு இருப்பதாகவும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் கடந்த சில நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. தலைநகர் சென்னையில் பகல் நேரத்தில் வெப்பம் வாட்டி வதைப்பதும் இரவு நேரத்தில் திடீரென மழை பெய்வதும் என அடிக்கடி கிளைமேட் மாறி வந்தது. அந்த வகையில், நேற்று முன்தினம் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் மாலை நேரத்தில் திடீரென்று மேகங்கள் திரண்டு வந்து பலத்த காற்றுடன் மழை பெய்தது.


**GOVERNMENT OF TAMILNADU**
**Water Resources Department, Middle Cauvery Basin Circle, Trichy – 20.**
**TNIAM PROJECT - REQUEST FOR BIDS (RFB)**
(One Envelop Bidding Process e-Procurement) **NATIONAL OPEN COMPETITIVE PROCUREMENT**
**For Item Rate Contracts in Civil Works**

கலைஞர் 100 1924 - 2023

**E- Bid Invitation No. 04 / 2023 - 2024 / DO1 / MCBC / Trichy / Dated 01.09.2023**

1) The Government of India has received financing from the World Bank toward the cost of the Tamil Nadu Irrigated Agriculture Modernisation Project and intends to apply part of the proceeds toward eligible payments under the contract for construction of works as detailed below. **(2)** Bidding will be conducted through national open competitive procurement using a Request for Bids (RFB) as specified in the World Bank's "Procurement Regulations for IPF Borrowers, July 2016,_Revised August 2018" ("Procurement Regulations"), and is open to all Bidders as defined in the Procurement Regulations. **(3)** The Water Resources Department, Government of Tamil Nadu, For and on behalf of Governor of Tamil Nadu, The Superintending Engineer, WRD, Middle Cauvery Basin Circle, Tiruchirappalli – 620 020, Tiruchirappalli District, Tamil Nadu now invites Bids from eligible Bidders for the construction of works detailed below in the table. **(4)** The bidding document is available online on from **08.09.2023 to 09.10.2023.** Bidders will be required to register on the website. The bidders would be responsible for ensuring that any addenda available on the website is also downloaded and incorporated. **(5)** For submission of the bid, the bidder is required to have Digital Signature Certificate (DSC) from one of the Certifying Authorities authorised by Government of India for issuing DSC. Aspiring bidders who have not obtained the user ID and password for participating in e-procurement in this Project, may obtain the same from the website: http://www.tntenders.tn.gov.in. (**6**) Bids must be submitted online on http://www.tntenders.tn.gov.in (website)on or before on **09.10.2023 upto 3.00 pm and will be publicly opened through online on 10.10.2023 onwards 3.00 pm,** in the presence of the bidders designated representatives who wish to attend. Any bid or modifications to bid (including discount) received outside e-procurement system will not be considered. If the office happens to be closed on the date of opening of the bids as specified, the bids will be opened on the next working day at the same time and venue. The electronic bidding system would not allow any late submission of bids. **(7)** All Bids must be accompanied by a Bid Security (or "Bid-Securing Declaration," as appropriate) of the amount specified for the work in the table below, drawn in favour of The Executive Engineer, WRD, River Conservancy Division, Tiruchirappalli, Tamil Nadu. Bid security will have to be in any one of the forms as specified in the bidding document and shall have to be valid for 45 days beyond the validity of the bid. **(8)** A pre-bid meeting will be held on **25.09.2023 at 11.00 AM at the office of The Superintending Engineer, WRD, Middle Cauvery Basin Circle, Tiruchirapalli – 620 020, Tiruchirapalli District,** Tamil Nadu to clarify the issues and to answer questions on any matter that may be raised at that stage as stated in ITB Clause 7.4 of 'Instructions to Bidders' of the bidding document.Bidders are advised to obtain the bidding document prior to the pre-bid meeting in order for bidders to have a good understanding of the scope of work under this contract for discussion and clarification at the pre-bid meeting.**(9)** The bidders are required to submit (a) original payment documents towards the cost of bid document and registration on e-procurement website (if applicable); (b) original bid security or Bid-Securing Declaration in approved form; and (c) original affidavit regarding correctness of information furnished with bid document with **The Superintending Engineer, WRD, Middle Cauvery Basin Circle, Tiruchirapalli – 620 020, Tiruchirapalli District,** Tamil Nadu (insert name and complete address) before the bid submission deadline, either by registered post/speed post/courier or by hand, failing which the bids will be declared non-responsive and will not be opened. **(10)** Other details can be seen in the bidding document.The Employer shall not be held liable for any delays due to system failure beyond its control. Even though the system will attempt to notify the bidders of any bid updates, the Employer shall not be liable for any information not received by the bidder. It is the bidders' responsibility to verify the website for the latest information related to this bid.

**Approximate Value of work Rs. 6858.37 Lakhs (including GST 18%)**

| வ எண் | வேலையின் பெயர் | முன் வைப்புத் தொகை | ஒப்பந்தப்புள்ளி படிவ விலை +GST | ஒப்பந்த காலம் | ஒப்பந்தக்காரரின் உரிய பதிவு வகுப்பு |
|---|---|---|---|---|---|
| | ஆற்றுப் பாதுகாப்புக் கோட்டம், திருச்சி | | | | |
| 1 | நந்தியார் கூழையார் உபவடிநிலத்தில் திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் ஒன்றியம் மற்றும் வட்டத்தில் உள்ள பெருவளை வாய்க்கால், அய்யன் வாய்க்கால், பங்குனி வடிகால் மற்றும் மேல்பங்குனி வாய்க்கால் மற்றும் இலால்குடி ஒன்றியம் மற்றும் வட்டத்தில் உள்ள கீழ் பெருவளை வாய்க்கால், தெற்கு அய்யன் வாய்க்கால், மேல் பங்குனி வாய்க்கால், கீழ் பங்குனி வாய்க்கால், மலட்டாறு வாய்க்கால் மற்றும் கடுவை வாய்க்கால்களை புனரமைத்து மற்றும் நவீனப்படுத்தும் பணி (Package No. 01 / TN IAMP / WRD / NKR / Works / Phase IV / 2022-23) | ரூ.137.20 இலட்சம் | இலவசமாக பதிவிறக்கம் செய்யலாம் | 18 மாதங்கள் (மழைக்காலம் மற்றும் நீர்பங்கீடு காலம் உட்பட) | வகுப்பு - I ல் ரூ.75.00 இலட்சம் மற்றும் அதற்கு மேல் மாநில அளவில் அல்லது பொதுப்பணித்துறையில் இதற்கு சமமான |

The bidders should upload the following documents, Signed copy of filled Bid Document, Scanned copy of Bid Security, BoQ, Scanned copy of Affidavit, Genuineness Certificate for Similar Nature of work issued from incharge of this work, GST Certificate, Annual Turn Over, Site Visit Certificate issued by the Executive Engineer incharge of this work, working Condition of Plants and Equipments Certificate issued from Executive Engineer in charge of this work. Other documents are as mentioned in Bid Document. Any corrections / Extension / Corrigendum if any will be issued in the above web site only.

செ.ம.தொ.இ / 4870/ ஒப்பந்தப்புள்ளி /2023

கண்காணிப்புப் பொறியாளர், நீவது, நடுக்காவிரி வடிநில வட்டம், திருச்சி - 620 020.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கரத்தை வலுப்படுத்துவோம் - நாடாளுமன்றத் தேர்தலில்

# ‘இந்தியா’ கூட்டணி வெற்றிக்குப் பாடுபடுவோம்!

## சென்னையில் சனாதன ஒழிப்பு மாநாட்டில் கழக இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

சென்னை, செப்.4–

**கழகத் தலைவர் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் கரத்தை வலுப்படுத்த நடைபெற இருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் ’இந்தியா’ கூட்டணி வெற்றிக்கு உழைப்போம்; பாடுபடுவோம் என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், சனாதன ஒழிப்பு மாநாட்டில் பங்கேற்றுப் பேசுகையில் குறிப்பிட்டார்.**

கழக இளைஞர் அணிச் செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் நேற்று முன்தினம் சென்னை காமராஜர் அரங்கில் தமிழ்நாடு முற்போக்கு கலைஞர்கள் எழுத்தாளர்கள் சங்கம் நடத்திய ‘சனாதன ஒழிப்பு மாநாட்டில் பங்கேற்றார்.

அப்போது அவர் பேசியதாவது:-

இந்த மாநாட்டின் தலைப்பே மிகவும் சிறப்பாக அமைந்திருக்கின்றது. ‘சனாதன எதிர்ப்பு மாநாடு’ என்று போடாமல் ‘சனாதன ஒழிப்பு மாநாடு’ என்று நீங்கள் போட்டிருக்கிறீர்கள். அதற்கு என்னுடைய வாழ்த்துகள். சிலவற்றை நாம் ஒழிக்கத்தான் வேண்டும். எதிர்க்க முடியாது.

கொசு, டெங்கு காய்ச்சல், மலேரியா, கொரோனா இதையெல்லாம் நாம் எதிர்க்கக் கூடாது. ஒழித்துக்கட்ட வேண்டும். அப்படித்தான் இந்த சனாதனம். சனாதனம் என்பதை எதிர்ப்பதைவிட, ஒழிப்பதே நாம் செய்ய வேண்டியதே முதல் காரணம் ஆகும். எனவே, இந்த மாநாட்டிற்கு மிகப் பொருத்தமான தலைப்பு வைத்திருக்கிறீர்கள். அதற்கு என்னுடைய பாராட்டுக்கள்.

சனாதனம் என்றால் என்ன? சனாதனம் என்கிற பெயரே சமஸ்கிருதத்திலிருந்து வந்ததுதான். சனாதனம் சமத்துவத்திற்கும் சமூக நீதிக்கும் எதிரானது. சனாதனம் என்றால் வேறு ஒன்றும் கிடையாது. சனாதனம் என்பதன் அர்த்தம் என்ன? நிலையானது அதாவது மாற்ற முடியாதது.

### சனாதனத்தின் அர்த்தம் என்ன?

யாரும் கேள்வி கேட்க முடியாது அப்படி என்பதுதான் சனாதனத்திற்குரிய அர்த்தம். எல்லாவற்றையும் மாற்ற வேண்டும். எதுவுமே நிலையானது கிடையாது எல்லாவற்றுக்கும் நாம் கேள்வி கேட்க வேண்டும் என்பதற்காக உருவான இயக்கம்தான் இந்த கம்யூனிஸ்ட் இயக்கமும், திராவிட முன்னேற்ற கழகமும்.

நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு இது நூற்றாண்டு. வடலூர் வள்ளலார் இராமலிங்க அடிகளார் அவர்களுக்கு இது 200வது ஆண்டு. தந்தை பெரியார் அவர்கள் தலைமையில் நடந்த வைக்கம் போராட்டத்திற்கும் இது நூற்றாண்டு. அதேபோல் தமிழ்நாட்டு மக்களுடைய உரிமைகளை வென்றெடுக்கத் தோன்றிய திராவிட முன்னேற்ற கழகத்திற்கு இது பவள விழா ஆண்டு. இவ்வளவு சிறப்புகளைப் பெற்ற ஆண்டாக இந்த ஆண்டு இருக்கின்றது.

தமிழ்நாடு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டு, சிறப்பாக நடந்து கொண்டு இருக்கின்றன. இந்த நிலையில் இருக்கும்போது கூட ஸ்கூலில் காலையில் உணவு போடுவதால், ஸ்கூல் கழிப்பறை, கக்கூஸ் நிரம்பி வழியுது என்று ஒரு பேப்பரில் செய்தி போடுகிறார்கள்.


நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உடனே சமூக வலைத்தளங்களில் ஒரு பதிவு போட்டார்கள். நிலாவுக்குச் சந்திராயன் விடுற இந்தக் காலத்திலேயே சனாதனம் இப்படிச் செய்தி போடுகிறதென்றால், நூறு ஆண்டுகளுக்கு முன்னே என்ன ஆட்டம் போட்டிருப்பார்கள் என அந்த ட்விட்டர் பதிவில் பதிவிட்டிருந்தார்கள்.

நம்முடைய முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் அவருடைய `நெஞ்சுக்கு நீதி’ புத்தகத்தில் எழுதி இருக்கிறார். அவருடைய அப்பா முத்துவேல் தாத்தா அவர்கள் கலைஞருடைய ஐந்தாவது வயதில் பள்ளிக்கூடக் கல்வியுடன் சேர்த்து இசைக்கல்வியும் கற்றுக்கொள்ள ஏற்பாடு செய்தார்கள். ஆனால், இசையைப் பள்ளியில் சேர்ந்து கற்றுக் கொள்வதற்கு கலைஞர் அவர்களுக்கு ஈடுபாடும் இல்லை. ஆர்வமும் இல்லை. அதற்கான காரணத்தையும் அவர் அந்த `நெஞ்சுக்கு நீதி’ நூலில் தெரிவித்திருக்கிறார்.

என்ன காரணம் என்றால், இசைக் கல்வி கற்றுக்கொள்ள வேண்டும் என்றால், பயிற்சிக்கு சட்டை போட்டுக் கொண்டு போகக்கூடாது. துண்டை இடுப்பில் தான் கட்டிக்கொண்டு போகவேண்டும். காலில் செருப்புப் போடக்கூடாது. இப்படிச் சாதி மத சாஸ்திர சம்பிரதாயம் என்பதன் பெயரால் நடத்தப்படும் கொடுமையை என்னுடைய பிஞ்சு மனம் வன்மையாக எதிர்க்கக் கிளம்பியதுதான், நான் இசைக் கல்வி கற்க தனக்கு ஆர்வம் ஏற்படவில்லை என கலைஞர் தெரிவித்திருக்கிறார்.

### கலைஞரிடம் எரிமலை வெடித்தது!

அந்த வயதில் கலைஞரின் பிஞ்சு மனதில் சனாதனத்திற்கு எதிராக எரிமலை வெடித்துள்ளது. அதனால்தான் தன்னுடைய ஐந்து வயதில் ஆரம்பித்த அந்தப் போராட்டம், 95 வயது வரைக்கும் கலைஞர் அவர்கள் சனாதனத்தை எதிர்த்து



சென்னையில் தமிழ்நாடு முற்போக்கு கலைஞர்கள், எழுத்தாளர்கள் சங்கம் நடத்திய சனாதன ஒழிப்பு மாநாட்டில் கழக இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்று உரையாற்றினார். திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, அமைச்சர் பி.கே.சேகர்பாபு உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர்.

பெரும் போரை நடத்தியுள்ளார்கள்.

தமிழ்நாட்டில் மாற்றக்கூடாது என்று எதுவுமே இல்லையென்று எல்லாத்தையும் மாற்றிக் காட்டியவர்தான் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். சினிமாவில் சமஸ்கிருதம் கலந்த தமிழ் வசனங்களைப் பேசிக்கொண்டிருந்தபோது, கலைஞர் அவர்கள் தான் தன்னுடைய பேனாவை ஈட்டியாக்கி, `எந்தக் காலத்திலடா அமபாள் பேசினாள்’ என `பராசக்தி’ திரைப்படத்தில் என்று வசனம் வைத்தார்.

இங்குகூடி இருப்பவர்களுக்கு நன்றாகத் தெரியும். தொடக்கத்தில், கலைஞரும் எழுத்துக்களும் சனாதன கருத்துக்களைத் திணிக்கத்தான் பயன்படுத்தப்பட்டு வந்தன. திராவிட இயக்கமும், நம்முடைய கம்யூனிச இயக்கமும் தோன்றிய பிறகுதான் கலையும், எழுத்தும் உழைக்கின்ற மக்களுக்காக, ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக மாறின.

முன்பெல்லாம், இங்கு இராமயணமும், மகாபாரதமும்தான் மக்களுக்கான கலையாகவும், எழுத்தாகவும் பேசப்பட்டு வந்தன. திராவிட இயக்கமும், கம்யூனிச இயக்கமும் வந்த பிறகுதான் மக்களுக்கு, `திருக்குறள்’, `சிலப்பதிகாரம்’, `மணிமேகலை’ எல்லாம் சமுகத்தில் பேசு பொருளாக பேசப்பட்டன. கலைஞர் அவர்கள் `குறளோவியம்’ எழுதினார். `பூம்புகார்’ என்ற திரைப்படத்தின் கதை வசனம் வாயிலாக சிலப்பதிகாரத்தின் கதையைச் சொண்ணார்.

### வள்ளலாரின் அணையா அடுப்பு!

மனிதர்கள் யாரும் பசியால் வாடக்கூடாது என்றுதான் வள்ளலார், வடலூரில் அணையா அடுப்பைப் பற்ற வைத்தார். வள்ளலார், அன்றைக்குப் பற்ற வைத்த அந்த அடுப்பு இன்னமும் அணையாமல் எரிந்து கொண்டு இருக்கிறது.

வள்ளலார் ஏற்றிய அந்த அடுப்பிலிருந்து நெருப்பை எடுத்துத்தான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய பள்ளிக்கூடங்களில் காலை உணவுத் திட்டம் என்ற பெயரில் அடுப்பைப் பற்ற வைத்திருக்கிறார்.

இன்றைக்கு 31 ஆயிரம் அரசுப் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை படிக்கக்கூடிய 17 இலட்சம் மாணவர்கள் இந்தக் காலை உணவுத் திட்டத்தால் பயனடைந்து வருகிறார்கள்.

## பாசிஸ்ட்டுகளை வீழ்த்தி சனாதனத்தை ஒழிப்போம்!

நானும் ஒரு பயனாளிதான். நான் எந்த ஊருக்கு, எந்த மாவட்டத்திற்குச் சுற்றுப்பயணம் சென்றாலும், காலை 8 மணிக்கு முதல் வேலை அந்த மாணவர்களோடு போய் உட்கார்ந்து உணவு சாப்பிடுவதுதான்.

இதில் இரண்டு முக்கியமான காரணங்கள் இருக்கின்றன. உங்களுக்குத் தெரியும் எப்போதும் உணவில் மிக மிக முக்கியமான உணவு காலையில் சாப்பிடுகின்ற உணவுதான். அதுமட்டுமில்லாமல், நான் அங்கே சென்று சாப்பிடும் போது அந்தக் குழந்தைகளுடன் உட்கார்ந்து பேசி, சாப்பாடு நல்லா இருக்கா, தினமும் நேரத்திற்குத் தருகிறார்களா, கொடுக்கின்ற உணவு தரமாக இருக்கிறதா, சுவையாக இருக்கிறதா என்றும் ஆய்வு மேற்கொள்வேன்.

அதே நேரத்தில் இன்னொரு வேலை, அந்த ஆசிரியர்களையெல்லாம் அழைத்து, வருகைப் பதிவேடு இதுவரைக்கும் எத்தனை மாணவர்கள் வந்தார்கள். இந்தத் திட்டத்துக்கு அப்புறம் எத்தனை மாணவர்கள் வருகிறார்கள். ரொம்ப நாள் பள்ளிக்கூடத்திற்கு வராத மாணவர்களுக்கெல்லாம் இந்தத் திட்டத்தைக் கொண்டு சேர்த்தீர்களா அவர்கள் எல்லாம் வருகிறார்களா? என்ற அந்த ஆய்வையும் நான் மேற்கொண்டு வருகின்றேன்.

### சனாதனத்திற்கு சம்மட்டி அடி!

மக்களை ஜாதிகளாகப் பிரித்து தனித்தனியாக இருக்கவேண்டும் என்று சொன்னதுதான் சனாதனம். ஆனால், கலைஞர் அவர்களோ எல்லா சமூக மக்களையும் ஒரே இடத்தில் குடி அமர்த்தி அந்த இடத்திற்கு, `சமத்துவபுரம்’ என்று பெயர் வைத்து சனாதனத்திற்குச் சம்மட்டி அடி கொடுத்தவர்தான் நம்முடைய கலைஞர் அவர்கள்.

இதற்கு முன்பு ஆட்சியிலிருந்த சனாதனத்தின் அடிமைகள் பத்து ஆண்டுகளாக சமத்துவபுரங்களைப் பராமரிக்கவே இல்லை. நம்முடைய ஆட்சி அமைந்த இந்த இரண்டு ஆண்டுகளில் சமத்துவபுரங்களைப் பராமரிப்பதற்கு ஒரு வீட்டிற்கு 50 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கி, அதேபோல் புதுப்பிப்பதற்கு ஒரு இலட்சம் ரூபாய் வழங்கி, சமத்துவப்புரங்களைப் புதுப்பித்திருக்கிறார் நம்முடைய திராவிட மாடல் அரசினுடைய முதலமைச்சர் அவர்கள்.

நம்முடைய கலைஞர் அவர்கள் அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அர்ச்சகர் பயிற்சி முடித்த வர்களுக்குக் கோயில்களில் அர்ச்சகராகப் பணியாற்ற ஆணை வழங்கினார்கள். இதுதான் திராவிட மாடல்.

நான் விளையாட்டுத்துறை அமைச்சராகவும், மகளிர் மேம்பாட்டு துறை அமைச்சராகவும்தான் நான் இந்த நேரத்திலே இங்கு வந்திருக்கிறேன். வீட்டுப் படிக்கட்டைக்கூடத் தாண்டக்கூடாது.

பெண்களைச் சனாதனம் அடிமைப்படுத்தி வைத்தது. ஆனால், இன்றைக்கு நீளம் தாண்டுதல், உயரம் தாண்டுதல் போட்டிகளில் பெண்கள் கலந்து கொண்டு சாதனை படைத்து வருகிறார்கள்.

இவையெல்லாம் நமக்கு எவ்வளவு பெருமையாக இருக்கின்றது. நாம் கொண்டாடுகின்றோம். இன்றைக்குப் பெண்களில் நிறைய பேர் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் மூலமாக கடன் பெற்று தொழில் செய்து பொருளாதாரத்துக்கு கணவனை எதிர்பார்க்காத ஒரு நிலைமையில் இருக்கின்றார்கள்.

பெண்களுக்கு சனாதனம் என்ன செய்தது. கணவனை இழந்த பெண்களை நெருப்பில் தள்ளி, உடன்கட்டை ஏற வைத்தது. கைம்பெண்களுக்கு மொட்டை போட்டு வெள்ளைப் புடவை கட்ட வைத்ததுதான் சனாதனம்.

### மாதம் ரூ. 1000 வழங்கும் புதுமைப் பெண் திட்டம்!

குழந்தைத் திருமணங்கள் நடந்தன. இதுதான் பெண்களுக்கு சனாதனம் செய்தது. ஆனால், பெண்களுக்கு திராவிடம் என்ன செய்தது? பெண்களுக்குக் கட்டணம் இல்லா பேருந்து வசதியை செய்து கொடுத்தது. கல்லூரியில் படிக்கின்ற பெண்களுக்குப் புதுமைப்பெண் திட்டம் மாதம் ஆயிரம் ரூபாய் அவர்களுக்குக் கல்வி ஊக்கத்தொகை.

வருகிற, செப்டம்பர் 15ஆம் தேதி பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பிறந்த நாளில் பெண்கள் அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கக் கூடிய ’கலைஞர் பெண்கள் உரிமை திட்டம்’.

மக்களை முன்னேற்றுவதற்கான திட்டங்களைத் திராவிட மாடல் அரசு நிறைவேற்றுகின்றது. ஒன்றிய அரசு மக்களைப் பின்னோக்கி, பின்னால் தள்ள பார்க்கின்றது.

மணிப்பூர் மாநிலத்தை எடுத்துக் கொள்ளுங்கள். பா.ஜ.க. ஆளுகின்ற மாநிலம் அங்கு சொந்த மாநில மக்களை இரண்டு குழுக்களாகப் பிரித்து, கலவரத்தைத் தூண்டி விட்டிருக்கிறார்கள் கலவரத்தை மூட்டி விட்டிருக்கிறார்கள் இதுதான் சனாதனம் கடந்த ஐந்து மாதங்களாக அந்தக் கலவரம் நடந்து கொண்டிருக்கிறது. 200 க்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். ஆனால், இங்கே சனாதனத்திற்கும் திராவிடர் மாடலுக்குமான வித்தியாசம் உங்களுக்கே தெரியும்.

> *நாம் நம்ம குழந்தைங்களைப் படிக்க வைப்பதற்காக, யோசிச்சு திட்டங்களைக் கொண்டு வருகின்றோம். ஆனால், பாசிஸ்ட்டுகள் நம்ம குழந்தைங்களைப் படிக்கவிடாமல் செய்வதற்கு என்ன வழின்னு யோசிச்சு அதற்கான திட்டங்களைக் கொண்டு வருகிறார்கள். ஏனென்றால், நாமெல்லாம் படிச்சிடக் கூடாதுங்கிறதுதான் சனாதன கொள்கை. அதற்கு ஒரு மிகச் சிறந்த உதாரணம் நீட் தேர்வு.*

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மணிப்பூர் மாநிலத்தில் நிறைய விளையாட்டு வீரர்கள் இருக்கிறார்கள். மணிப்பூர் மாநில விளையாட்டு வீரர்களுக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அழைப்பு விடுத்தார்கள்.

### மணிப்பூர் வீரர்களுக்கு சென்னையில் பயிற்சி!

உங்களால் அங்கு விளையாட்டுப் பயிற்சி எடுப்பதற்கு உரிய பாதுகாப்பான சூழ்நிலை அங்கு இல்லை என்றால், நம்முடைய மாநிலத்துக்கு வாருங்கள் என்று அழைப்பு விடுத்தார்கள் அவரது அழைப்பை ஏற்று மணிப்பூர் மாநிலத்தைச் சேர்ந்த 18 விளையாட்டு வீரர்கள் `பென்சிங்’ `வாள் வீச்சு’ வீரர்கள் இங்கு வந்து கிட்டத்தட்ட 20 நாட்களாக, இங்கு தங்கி அவர்கள், அவர்களுடைய பயிற்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

அவர்களுக்குரிய அத்தனை வசதிகளும், போக்குவரத்து வசதி, உணவு வசதி, தங்குமிட வசதி ஆகியவை அனைத்தும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

எங்கள் மாநிலத்தில்கூட இப்படி எங்களைப் பார்த்துக் கொள்ளவில்லை என்று அத்தனை விளையாட்டு வீரர்களும் நம்முடைய முதலமைச்சர் அவர்களை வாழ்த்திக்கொண்டிருக்கிறார்கள்.

பொய்ச் செய்தி பரப்புவது. கலவரத்தைத் தூண்டுவதுதான் சனாதனம்.

சில மாதங்களுக்கு முன்பு நம்முடைய வட மாநிலத் தொழிலாளர்கள் கொல்லப்படுகிறார்கள் என்ற ஒரு பொய்ச் செய்தியைப் பரப்பினார்கள். ஆனால், அதை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகச்சிறப்பாகக் கையாண்டார்கள்.

நம்முடைய அதிகாரிகள் பிஹார் சென்றார்கள். அங்கிருந்த அதிகாரிகள் இங்கு வந்து ஆய்வு செய்தார்கள். தவறாக எந்த சம்பவமும் நடக்கவில்லை என்று சொன்னார்கள்.

பாசிஸ்ட்டுகளின் அந்தப் பொய்ச் செய்தியைச் சுக்குநூறாக நொறுக்கினார் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். இப்போது கூடப் பாருங்கள். பல்வேறு தொழில்களில் இருக்கக்கூடிய கைவினைக் கலைஞர்களை ஊக்குவிக்கின்றோம் என்று சொல்லி, ஒன்றிய அரசு விஸ்வகர்மா என்று ஒரு திட்டத்தைக் கொண்டு வருகிறார்கள்.

### ஒன்றிய அரசின் சதி; விஸ்வகர்மா திட்டம்!

ஆனால் அதில் ஒரு சதி இருக்கு. கைவினைக்கலைஞர்கள் குடும்பங்களில் இருக்கக்கூடிய அடுத்தத் தலைமுறை பிள்ளைகளுக்கும் இந்தத் திட்டத்தில் பயிற்சி கொடுக்கப் போறார்களாம்.

இதைத்தான் குலக்கல்வித் திட்டம் என்று 1953 ஆம் ஆண்டு ராஜகோபாலச்சாரி இங்கு கொண்டு வந்தார். தந்தை பெரியார் இந்தத் திட்டத்தை எதிர்த்துக் கடுமையான போராட்டங்களை அறிவித்தார். அதனால்தான், ராஜகோபாலச்சாரியார் முதலமைச்சர் பதவியிலிருந்து விலகுகின்ற நிலை வந்தது.

பின்னர், முதலமைச்சரான திரு.காமராஜர் அவர்கள் குலக்கல்வித் திட்டத்தை ஒழித்தார். அந்தக் காமராஜருடைய பெயரில் இருக்கக்கூடிய அரங்கத்தில்தான் இன்றைக்கு இந்த மாநாடு நடந்து கொண்டிருக்கிறது.

இந்த காமராஜர் அரங்கத்தில் இருந்து நாம் அத்தனைப்பேரும் உரிமையோடு, உறுதியாகச் சொல்வோம். ஒன்றிய அரசு கொண்டு வருகின்ற ‘விஸ்வகர்மா’ திட்டத்தை நம்முடைய மக்கள் திராவிட முன்னேற்றக் கழகம் கடுமையாக எதிர்க்கும்.

எப்படி குலக்கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்த ராஜாஜி முதலமைச்சர் பதவியில் இருந்து விலகினாரோ, அதே மாதிரி இந்த விஸ்வகர்மா திட்டத்தைக் கொண்டு வந்திருக்கின்ற நரேந்திர மோடி அவர்கள் வருகிற நாடாளுமன்றத் தேர்தலில் படுதோல்வி அடைவார்.

நாம் நம்ம குழந்தைங்களைப் படிக்க வைப்பதற்காக, யோசிச்சு திட்டங்களைக் கொண்டு வருகின்றோம். ஆனால், பாசிஸ்ட்டுகள் நம்ம குழந்தைங்களைப் படிக்கவிடாமல் செய்வதற்கு என்ன வழின்னு யோசிச்சு அதற்கான திட்டங்களைக் கொண்டு வருகிறார்கள். ஏனென்றால், நாமெல்லாம் படிச்சிடக் கூடாதுங்கிறதுதான் சனாதன கொள்கை.

அதற்கு ஒரு மிகச்சிறந்த உதாரணம் நீட் தேர்வு. 2017 ஆம் ஆண்டு தமிழ்நாட்டிற்குள் கொண்டுவரப்பட்டது நீட் தேர்வு. இதுவரைக்கும் அரியலூர் அனிதாவில் ஆரம்பித்து, இப்போது குரோம்பேட்டை ஜெகதீஷ் வரைக்கும் 21 குழந்தைகளை நாம் பறிக்கொடுத்திருக்கிறோம்.

நாம் மருத்துவக் கட்டமைப்பில் இந்தியாவுக்கே முன்னோடி மாநிலமாக இருக்கின்றோம். தமிழ்நாட்டை என்ன சொல்வார்கள், `இன்டியாஸ் மெடிக்கல் ஹப்’ என்பார்கள். இதுவரைக்கும் இந்தியாவில் இருக்கக்கூடிய மிகச் சிறந்த மருத்துவர்களை உருவாக்கியதுதான் நம்முடைய தமிழ்நாடு. ஆனால், அதைச் சிதைக்க வேண்டும் என்று கொண்டுவரப்பட்டதுதான் இந்த நீட் தேர்வு.

### ‘நீட்’ ரத்தாகும் நாளே நமக்கு வெற்றி நாள்!

நாம் பல போராட்டங்களை நடத்தியிருக்கிறோம். கடந்த 20 ஆம் தேதி மிகப் பெரிய உண்ணாவிரத அறப்போராட்டத்தை, நீட் தேர்வை ரத்துச் செய்யக் கோரி ஆளுநரைக் கண்டித்து, மிகப்பெரிய ஒரு உண்ணாவிரத அறப்போராட்டத்தை நடத்தினோம்.

எல்லாரும் சொல்கிறார்கள். நீட் தேர்வு போராட்டம் மிகப்பெரிய வெற்றி, வெற்றி என்று. ஆமாம், நம்முடைய எதிர்ப்பைத் தெரிவித்த விதத்தில் வெற்றி அடைந்திருக்கிறோம். ஆனால், உண்மையான வெற்றி எப்போது, என்றைக்கு நீட் தேர்வை முழுமையாக தமிழ்நாட்டிலிருந்து ரத்து செய்யப்படுகிறதோ அப்போதுதான் நமக்கு வெற்றி.

தேர்தல் காலத்தில், பிரச்சாரத்தில் நான் வாக்குறுதி கொடுத்தேன். நீட் தேர்வு ரத்து செய்யப்படும் அதற்கான முழு முயற்சிகள் எடுக்கப்படும் என்று நான் சொன்னேன்.

அதற்காக உண்மையாக நானும், நம்முடைய திராவிட மாடல் அரசும், முதலமைச்சரும் முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கிறோம். இந்த நீட் தேர்வை ரத்துச் செய்ய வேண்டுமென்றால் இந்த ஒரு உதயநிதி போதாது. நீங்கள் ஒவ்வொருத்தரும், தமிழ்நாட்டு மக்கள் ஒவ்வொருத்தரும், மாணவர்கள் ஒவ்வொருத்தரும், இளைஞர்கள் ஒவ்வொருத்தரும் உதயநிதியாக மாறி அந்த நீட் தேர்வு போராட்டத்திலே உங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.

எப்பொழுது நீட் தேர்வு ரத்து செய்யப்படுகிறதோ, அப்போதுதான் உண்மையான மாணவர்களுக்கான வெற்றி. மாநில சுயாட்சிக்கான அந்த வெற்றி. இப்படி சனாதனத்துக்கும் திராவிடத்துக்குமான போர் உச்சத்திலே நடந்துக்கிட்டு இருக்கிற இந்தச் சூழலில்தான் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள், கலைஞர்கள் சங்கம் சனாதன ஒழிப்பு மாநாட்டை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்து நடத்திக் கொண்டிருக்கிறீர்கள்.

### சனாதனவாதிகளுக்கு வயிற்றெரிச்சல்!

இது மிக மிக அவசியமான மாநாடு. நீங்கள் இந்த மாநாட்டை மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்திக் கொண்டிருக்கிறீர்கள். அது பத்தாது, இந்த மாநாட்டை ஆண்டு முழுவதும் எப்பொழுதெல்லாம் முடியுமோ, அப்பொழுதெல்லாம் நடத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். இந்த மாநாட்டைப் பார்க்கின்றபோது சனாதனவாதிகளுக்கு சிலருக்கு நிச்சயம் வயித்தெரிச்சல் இருக்கும்.

அவர்களுக்கு முடிந்தவரை எரியட்டும். இந்த மாநாடுகளை நீங்கள் தொடர்ச்சியாக நடத்த வேண்டும். இன்றைக்கு இந்த மாநாடு இன்று காலை 08.30 மணியளவில் ஆரம்பித்து, இன்று ஒரு நாள் முழுவதும் நடைபெறுகிறது.

சனாதனத்துக்கு எதிரான தலைப்புகளில் பலர் இங்குப் பேச இருக்கிறார்கள். இதில் கலந்துகொண்டிருக்கிற எல்லாருக்கும் எனது பாராட்டுகளையும், என்னுடைய வாழ்த்துகளையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இங்கே பேசிவிட்டு நாம் அப்படியே கலைந்து விடக்கூடாது. இங்கு பேசப்பட்ட விஷயங்களை, கருத்துக்களை எல்லாம் நாம் அனைவரும் பொதுமக்களிடம் கொண்டு போய் சேர்க்க வேண்டும்.

கலைஞர் சொல்லியிருக்கிறார். நான் மட்டும் பெரியாரையும் – அண்ணாவையும் பார்க்காமல் இருந்திருந்தால், ஒரு கம்யூனிஸ்ட்டாக இருந்திருப்பேன் என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களே சொல்லியிருக்கிறார்.

கலைஞர் அதை வெறும் பேச்சுக்காகச் சொல்லவில்லை. தொழிலாளர் வர்க்கத்தை உள்ளன்போடு நேசித்தவர் டாக்டர் கலைஞர் அவர்கள். அதனால்தான் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு கம்யூனிஸ்ட் இயக்கத் தலைவரான ஸ்டாலின் அவர்களின் பெயரை, தன்னுடைய மகனுக்குப் பெயராகச் சூட்டி பெருமை சேர்த்தார், மகிழ்ச்சி அடைந்தார்.

அதுமட்டுமல்ல, மே 1ஆம் தேதி உழைப்பாளர் தினத்தன்று ஊதியத்துடன் கூடிய விடுமுறையைத் தந்தவர் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

அப்படிப்பட்ட இடதுசாரித் தோழர்கள் ஏற்பாடு செய்திருக்கும் இந்த மாநாட்டில் பங்கேற்று அதில் உரையாற்றியது எனக்கு மிகப்பெரிய மகிழ்ச்சி.

### இளைஞர் அணி சார்பில் பாசறைக் கூட்டங்கள்!

இங்கே நம்முடைய மருத்துவர்.எழிலன் அவர்கள் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய இளைஞர் அணியின் சார்பாக பயிற்சி பாசறைக் கூட்டம், திராவிட இயக்க வரலாறு, மொழிப் போர் வரலாறு இதையெல்லாம் நம்முடைய இளைஞர் அணியின் சார்பாகத் தொகுதி வாரியாக நடத்தி முடித்துள்ளோம்.

நம் தலைவர் அவர்கள் எங்களுக்கு ஆணையிட்டிருக்கிறார்கள். தொகுதி வாரியாகப் பணியை முடித்து விட்டீர்கள். அடுத்து ஒன்றிய வாரியாகப் பயிற்சி பாசறை 2.0 இதை விரைவில் தலைவருடைய ஆணைக்கேற்ப நடத்த உள்ளோம். அதிலே நம்முடைய கம்யூனிட் இயக்கத்தைச் சார்ந்த தோழர்களான நீங்களெல்லாம் பங்குபெற்று உங்களுடைய கருத்துக்களையெல்லாம் நீங்கள் பறிமாறிக் கொள்ள வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே வேண்டுகோள் வைக்கின்றேன்.

இப்போது நாம் மிக முக்கியமான காலகட்டத்தில் இருக்கின்றோம். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இரண்டு நாட்கள் நேற்று, நேற்று முன்தினம் மும்பையிலே நடந்த இந்தியா கூட்டணித் தலைவர்கள் கூட்டத்திலே கலந்துகொண்டு விட்டு இப்போதுதான் திரும்பி இருக்கிறார்கள்.

சில மாதங்களில் நாடாளுமன்றத் தேர்தல் வர இருக்கிறது. எனவே, நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய கரத்தை வலுப்படுத்த கூடிய வகையிலே அனைவரும் ஒன்று சேர்ந்து `இந்தியா கூட்டணி’யின் வெற்றிக்கு நாம் அனைவரும் உழைப்போம், பாடுபடுவோம்.

### 40 தொகுதிகளிலும் வெற்றி பெறுவோம்!

தமிழ்நாடு, புதுச்சேரியில் உள்ள 40 இடங்களிலும் வெல்வோம் என்று உறுதி எடுப்போம். இந்த சனாதன ஒழிப்பு மாநாடு வெல்ல என்னுடைய வாழ்த்துக்களை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சனாதனம் வீழட்டும், திராவிடம் வெல்லட்டும்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரையாற்றினார்.



கலைஞர் 100 1924 - 2023
4.09.2023
தூத்துக்குடி ஒருங்கிணைந்த
மாவட்ட திமுக இளைஞர் அணி
செயல்வீரர்கள் கூட்டம் மற்றும்
கழக முன்னோடிகளுக்கு பொற்கிழி
வழங்கி சிறப்பிக்கும் மாபெரும் நிகழ்ச்சி
கழக இளைஞர் அணி செயலாளர்
விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களே! வருக! வருக!!
பெ.கீதாஜீவன்
மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர்.
தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர்
அனிதா R.ராதாகிருஷ்ணன்
மாண்புமிகு மீன் வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர்
தூத்துக்குடி தெற்கு மாவட்டச் செயலாளர்
எம்.சி.சண்முகையா BA.,LLB.,
சட்டமன்ற உறுப்பினர் ஒட்டப்பிடாரம் தொகுதி
ஒட்டப்பிடாரம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர்
எல்.ரமேஷ் BA.,LLB.,
யூனியன் சேர்மன் ஒட்டப்பிடாரம்,
ஒட்டப்பிடாரம் மேற்கு ஒன்றியம் தூத்துக்குடி தெற்கு மாவட்ட திமுக.
G.V.மார்க்கண்டேயன்
விளாத்திக்குளம் சட்டமன்ற உறுப்பினர்




4.09.2023
தூத்துக்குடி ஒருங்கிணைந்த மாவட்ட
திமுக இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம்
மற்றும் கழக முன்னோடிகளுக்கு பொற்கிழி
வழங்கி சிறப்பிக்கும் மாபெரும் நிகழ்ச்சிக்கு
வருகை தரும்
மாநில கழக இளைஞர் அணி செயலாளரும்
விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சரும்
மாண்புமிகு
உதயநிதி ஸ்டாலின்
அவர்களை வணங்கி வருக! வருக! என வரவேற்கிறோம்...
வசந்தம்
A.C.ஜெயக்குமார்
மாநில நெசவாளர் அணி
துணைச்செயலாளர்
விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதி தூத்துக்குடி வடக்கு மாவட்டம்.

## தி.மு.க. தொண்டர் அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்! (நான்காவது பட்டியல்)

### தொண்டர் அணிச் செயலாளர் பெ.சேகர் அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. தொண்டர் அணியின் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**கோவை வடக்கு மாவட்டம்**

தலைவர் - நவ்ஷத் 68, பள்ளி வீதி, கரும்புக்கடை கேவை 641008

துணை தலைவர் - முருகராஜ் 4/5, ஆறுமுக உடையர் தெலுங்கு பாளையம், கோவை

அமைப்பாளர் - **ம.கணேஷ்** 48, ஓம் சிவ சக்தி நகர் சரவணம்பட்டி, கோவை

துணை அமைப்பாளர்கள் - ஜி.குணசீலன் ஆனந்த் ஐயங்கார் வீதி என்.ஜி.ஜி.ஓ. காலனி அசோகபுரம், கோவை கார்கில் (எ) சின்ராஜ் 14/6 6/50 நரசிபுரம் மெயின்ரோடு தொண்டாமுத்தூர், கோவை எ.ஜான் பாஷா மெக்ரிகர் ரோடு, ஆர்.எஸ். புரம் கோவை ஜாகிர் உசேன் 12 இ முத்து காலனி, கரும்புக்கடை குனியமுத்தூர், கோவை பா.அருண்குமார் 3/65, பெரியார் நகர், மடத்தூர், சின்ன தடாகம், கோவை

**கோவை மாநகர் மாவட்டம்**

தலைவர் - ஆ.கண்ணன் 300, குரும்பர் சந்து, ம.ந.க. வீதி, கோவை 1

துணை தலைவர் - சாமி தங்கம் 50/93, தேவாங்கபேட்டை வீதி, எண்2, பூமார்க்கெட், கோவை

அமைப்பாளர் - **அர்சுனன்** 7வது வீதி தொடச்சி, காந்திபுரம், கோவை-12

துணை அமைப்பாளர்கள் - ரா.மயில்சாமி 500, நஞ்சுண்டாபுரம் ரோடு, ராமநாதபுரம், கோவை 45 மு.கதிரவன் 47/15, பாரதியார் நகர் மெயின் ரோடு, கணபதி, கோவை மோசஸ் 72, 5வது வீதி, காமராஜபுரம், ஆர்.எஸ். புரம், கோவை2 அர.வாசுதேவன் 38சி, ரங்கநாயகி நகர், உடையாம்பாளையம், கோவை எஸ்.கணேசன் 24/126, ராஜ ரத்தினம் வீதி, காட்டூர், கோவை கி.கார்த்திகேயன் 123, ஸ்ரீ ராமபுரம், பி.என். பாளையம், கோவை-37

**கோவை தெற்கு மாவட்டம்**

தலைவர் - இளையராஜ (கராத்தே ராஜா) 20/9, குப்புசாமி வீதி, பொள்ளாச்சி 642001

துணை தலைவர் - ஜெ.ரமேஷ் எப், 5 - வது வீதி, செந்தூர் நகர், பாப்பம்பட்டி, சூலூர் 641016

அமைப்பாளர் - **செ.கு.பாலசந்தர்** 1/226, தேவனாம்பாளையம், நெகமம் (வழி) கிணத்துக்கடவு, பொள்ளாச்சி 642120

துணை அமைப்பாளர்கள் - என்.பி.சுவாமிநாதன் 1/1044, அரசு காலனி, நீலாம்பூர், சூலூர், கோயம்புத்தூர் 641062 சி. சானவாஷ் (எ) பாபுலால் 1736, பிளாக் 55 வெள்ளலூர் ஹவுசிங் யூனிட், வெள்ளலூர் (அஞ்சல்) கோயம்புத்தூர் எம்.சிவக்குமார் குழந்தைவேல் ஐயன் தோட்டம் வடசித்தூர், கிணத்துக்கடவு 641202 வெங்கடசுப்பிரமணியன் 5/34, டி1எ, அசோக் நகர் வீதி, அம்மன் நகர், வெள்ளலூர் 641111 கே.சுரேஷ்குமார் தில்லை நகர், மகாலிங்கபுரம் (அஞ்சல்) பொள்ளாச்சி 642002

**சென்னை தென்மேற்கு மாவட்டம்**

தலைவர் - பி.சீனிவாசன் எண்.99, இராஜங்கம் மத்திய வீதி, வடபழனி, சென்னை 26

துணை தலைவர் - த.முருகன் எண்.32, 17, சர்தார் பட்டேல் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை 33

அமைப்பாளர் - **ம.ஆனந்தன்** எண்.5/5, டேங்க்பண்ட் ரோடு, நந்தனம், சென்னை 35

துணை அமைப்பாளர்கள் - எம்.கோவிந்தராஜ் 1/2 வது தெரு, மெக்காபுரம், திருவல்லிக்கேணி, சென்னை 5 சிட்டி டி.மதன் எண்.98, கீரீன்வேஸ் ரோடு, ஆர்.ஏ.புரம், சென்னை 28 ஜி.கே. நரசிம்மன் எண்.166/191, அன்னை சத்தியா நகர், 4வது தெரு, கீரீன்வேஸ் சாலை, சென்னை 28 ஞானபிரபு எண்.3/73, சௌத் கேசவபெருமாள்புரம், பாரதி நகர், 3வது குறுக்கு தெரு, ஆர்.ஏ.புரம், சென்னை - 28 எம்.சதிஷ் எண்.122, ஏகாம்பரம் தெரு, மயிலாப்பூர், சென்னை - 4 வே.மணிகண்டன் எண்.14, ஏகாம்பரம் பிள்ளை தெரு, அம்பேத்கர் பாலம், மயிலாப்பூர், சென்னை-4 ஆறுமுகம் எண்.1167 14வது தெரு, அசோக் நகர், சென்னை -83

**அரியலூர் மாவட்டம்**

தலைவர் - பி.ஆர்.பாண்டியன் பொன்பரப்பி அஞ்சல் செந்துரை ஒன்றியம், அரியலூர் மாவட்டம்

துணை தலைவர் - ம.ஆனந்தன் சாஸ்திரி நகர், கல்லங்குறிச்சி சாலை, அரியலூர் ஒன்றியம், அரியலூர் மாவட்டம்

அமைப்பாளர் - **முருகானந்தம்** புதுப்பாளையம் அஞ்சல் தா. பழூர் ஒன்றியம், அரியலூர் மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் - ஆப்ரகாம் பெரியகிருஷ்ணாபுரம், ஆண்டிமடம் ஒன்றியம், அரியலூர் மாவட்டம் சிவக்குமார் தேவமங்கலம் அஞ்சல் ஜெயங்கொண்டம் ஒன்றியம், அரியலூர் மாவட்டம் சேகர் கோட்டியால் அஞ்சல் தா.பழூர் ஒன்றியம், அரியலூர் மாவட்டம். செல்வராஜ் கல்லங்குறிச்சி, அரியலூர் ஒன்றியம், அரியலூர் மாவட்டம் உலகநாதன் ஓட்டக்கோவில், அரியலூர் ஒன்றியம், அரியலூர் மாவட்டம்

**சென்னை வடகிழக்கு மாவட்டம்**

தலைவர் - ஜே.முருகன் எண்.1/355, சத்தியவாணிமுத்த தெரு, தீர்த்தக்கிரையம்பட்டு, செங்குன்றம், சென்னை 52

துணை தலைவர் - சி.சரவணன் எண். 14/8, ஈசனிமூர்த்தி கோயில் தெரு, 1வது தெரு, திருவொற்றியூர் சென்னை19

அமைப்பாளர் - **ரா.மோகனசுந்தரம்** எண். 18/13, பொன்னியம்மன் நகர், 5வது தெரு, திருவொற்றியூர் சென்னை 19

துணை அமைப்பாளர்கள் - பா.அருண்ராஜ் எண். 3/99, பெருமாள் கோயில் தெரு, செட்டிமேடு, சென்னை 60 த.சீனிவாசன் எண்.1, தாமரை குளம் 2வது தெரு, பெரியதோப்பு, மணலி, சென்னை 68 ப.சு.க.இளங்கோவன் எண். 5/111, சுப்பிரமணி பாரதி தெரு, எம்.எ. நகர், பாடியநல்லூர், சென்னை 52 சு.பார்த்தசாரதி எண். 3/73, பெருமாள் கோயில் தெரு, செட்டிமேடு, சென்னை60 பா.ரமேஷ் எண். 4718, 1வது பிராதன சாலை, மாத்தூர் எம்.எம்.டி.எ சென்னை68 ஜி.முத்துகுமார் எண். 38/4, சோமசுந்தரம் நகர், 2வது தெரு, திருவொற்றியூர், சென்னை-19

**நாகை மாவட்டம்**

தலைவர் - எஸ்.சிவராமன் 2, புகழேந்தி தெரு, உத்தமசோழபுரம், நரிமனம் (அஞ்சல்) நாகை தாலுக்கா

துணை தலைவர் - வி.சாய்பாட்ஷா 19, மெயின் ரோடு, குருக்கத்தி கூத்தூர் அஞ்சல், கீழ்வேலூர் தாலுக்கா

அமைப்பாளர் - **எஸ்.வி.டி.அருள்** 5/59, ஆண்டியப்பன் காடு மருதூர் தெற்கு (அஞ்சல்) வேதாரண்யம் தாலுகா

துணை அமைப்பாளர்கள் - இ.ஜோதிபாசு அகரவெளி தெரு, திருக்குவளை அஞ்சல், நாகப்பட்டினம் தமிழ்வாணன் காமராஜர் காலனி, அம்பல் அஞ்சல், நாகப்பட்டிணம் பொன். அழகிரிசாமி ஆணைக்குளத்தெரு, வாழ்குடி விற்குடி (அஞ்சல்) நாகை தாலுக்கா

டி.எஸ்.பாலு ஆயக்காரன்புலம் 2 செட்டியார் குத்தகை, வேதாரண்யம் ராஜ்குமார் மெயின்ரோடு, பனங்குடி நாகூர் (அஞ்சல்) ஆர்.ரஞ்ஜித் குமார் 8, சிவன் சன்னதி தெரு, நாகூர் கு.விஜயன் 77, அம்பேத்கார் நகர் வடக்கு பிரோடும் தெரு, நாகூர் முகம்மது ரசீது மரைக்காயர் 429, மெயின்ரோடு நாகூர்

**புதுச்சேரி மாநிலம்**

தலைவர் - கோ.கோபிநாத் 9, மகிழ வீதி, முத்தியால்பேட்டை, புதுச்சேரி 3

துணை தலைவர் - வலேர் மாதன்ராஜ் 2, சங்கோதி அம்மன் கோவில் வீதி, உருளையன்பேட்டை, புதுச்சேரி

அமைப்பாளர் - **பெ.வீரன்** 31, அந்தோணியர் கோவில் தெரு, குமரகுருபள்ளம், புதுச்சேரி

துணை அமைப்பாளர்கள் - இரா.சந்தோஷ் 31, குமரன் வீதி, தத்தக்குட்டை, அரும்பார்த்தபுரம், புதுச்சேரி 605110 சே.சிவராம், எம்.இ., 25, எப். பிளாக், ஹவுசிங் போர்டு, ஜவகர் நகர், பூமியான்பேட், புதுச்சேரி 605005 வ.வேல்முருகன் 38, முடக்கு மாரியம்மன் கோவில் தெரு, கோவிந்தசாலை, புதுச்சேரி 11 அ.ரபேல் 21, முல்லை வீதி, புது நகர், தேங்காய்திட்டு, புதுச்சேரி செ.பாலகுரு 87ஏ, மெயின் ரோடு, குருவிநத்தம் அஞ்சல், புதுச்சேரி - 605402 வீ.கருணாகரன் 57, 7வது குறுக்குத் தெரு, அண்ணா நகர், புதுச்சேரி - 605005 அ.பார்த்திபன் 29, புருஷோத்தமன் வீதி, சண்முகம் நகர், அரியாங்குப்பம் புதுச்சேரி - 7 ப.வெங்கடேசன் 105, சுப்புராயன் வீதி, அரியாங்குப்பம் புதுச்சேரி - 7 ரா.கோபதி 39, புதுத் காலனி, நடுத் தெரு, செல்லிப்பட்டு, புதுச்சேரி 605501

**தாம்பரம் மாநகரம்**

அமைப்பாளர் - **கி.முத்துமாறன்** 12எ, திருவள்ளுவர் தெரு, எம்.இ.எஸ்.ரோடு, மோதிலால் நகர், கி.தாம்பரம், சென்னை-600059

துணை அமைப்பாளர்கள் - எம்.கே.குணசேகரராஜா 7 வ.உ.சி. தெரு, கஸ்தூரிபாய் நகர், மே.தாம்பரம், சென்னை - 600045 இ.வி.சுரேஷ் 33, 3வது பிரதான சாலை, ராமகிருஷ்ணாபுரம் பிரதான சாலை, சென்னை - 600059 கோ.விஜய் கணேஷ் 65 பேட்டை தெரு, அனகாபுத்தூர், சென்னை-600070 ம.வாசு 6 நம்மாழ்வார் தெரு, பழைய பல்லாவரம், சென்னை 600117 எஸ்.பிரபாகரன் 10 வடக்கு மாடவீதி, மாடம்பாக்கம், சென்னை-600126

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18.

**மாஸ்டர் பெ. சேகர்,**
செயலாளர்,
தி.மு.க. தொண்டர் அணி



புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம் ஊராட்சி ஒன்றியம், பெருங்குடி அரசு உயர்நிலைப்பள்ளியில், "கலைஞரின் வரும்முன் காப்போம் திட்டம் மருத்துவ முகாமினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி துவக்கி வைத்து, கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஐ.சா.மெர்சி ரம்யா, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மா.செல்வி, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், அரிமளம் ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.மேகலாமுத்து, துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.ராம்கணேஷ் (புதுக்கோட்டை), உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

## சேலத்தில் நடைபெறும் தி.மு.க. இளைஞர் அணி மாநாட்டில்

# தொகுதிக்கு 10 ஆயிரம் பேர் பங்கேற்க வேண்டும்!

### நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்!

நாமக்கல், செப். 4 -

நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டத்தில் சேலத்தில், திமுக இளைஞர் அணி 2 ஆவது மாநாட்டில் தொகுதிக்கு 10,000 பேர் பங்கேற்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

நாமக்கல் திருச்சி சாலையில் உள்ள நளா ஹோட்டலில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் மாவட்ட செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் தலைமை தாங்கி, கூட்டப் பொருள் குறித்து விளக்கம் அளித்தார்.

கூட்டத்தில் வனத்துறை அமைச்சர் மா. மதிவேந்தன், தீர்மானக் குழு செயலாளர் பார். இளங்கோவன், சட்டப்பேரவை உறுப்பினர்கள் பெ.ராமலிங்கம், கே.பொன்னுசாமி, மாவட்ட அவைத் தலைவர் மணிமாறன், முன்னாள் எம்.பி. பி.ஆர். சுந்தரம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த கூட்டத்தில், இராசிபுரம் மக்களின் நீண்டநாள் கனவான கூட்டு குடிநீர் திட்டத்திற்கு ரூ.854.37 கோடி நிதி ஒதுக்கீடு செய்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், நகராட்சி நிர்வாகதுறை அமைச்சர் கே.என்.நேரு அவர்களுக்கும் இக்கூட்டத்தின் மூலம் நன்றியினை தெரிவித்து கொள்வது, இத்திட்டத்தால் ராசிபுரம் நகராட்சி, ராசிபுரம் ஒன்றியம், வெண்ணந்தூர் ஒன்றியம், நாமகிரிப்பேட்டை ஒன்றியம், புதுச்சத்திரம் ஒன்றியம், நாமகிரிப்பேட்டை பேரூராட்சி, பட்டணம் பேரூராட்சி, சீராப்பள்ளி பேரூராட்சி, வெண்ணந்தூர் பேரூராட்சி, அத்தனூர் பேரூராட்சி, இரா.புதுப்பட்டி பேரூராட்சி, பிள்ளா நல்லூர் பேரூராட்சி ஆகிய நகராட்சி, பேரூராட்சி, ஒன்றியங்களில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ரூ.854.37 கோடி மதிப்பீட்டிலான கூட்டு குடிநீர் திட்டத்தின் அடிக்கல் நாட்டு விழாவிற்கு ராசிபுரம் கூட்டு குடிநீர் திங்கட் கிழமை அத்திட்டத்தை தொடங்கி வைக்க வரும் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு சிறப்பான வரவேற்பு அளிப்பது,

தமிழின தலைவர் டாக்டர். கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை சிறப்பாக நடத்திடும் விதமாக நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து சார்பு அணியினருக்கும் பல்வேறு விதமான போட்டிகள், நிகழ்ச்சிகள் நடத்திட வேண்டி தலைமை கழகத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் பொருட்டு அனைத்து அணியினரும் தலைமை கழகத்தின் அறிவிப்பின் படி நிகழ்ச்சிகளை சிறப்பாக நடத்திட வேண்டும்,

நாமக்கல் கிழக்கு மாவட்டத்திற்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டத்திற்கு வருகை தர உள்ளார்கள். அதனை முன்னிட்டு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளித்து இந்த செயல்வீரர்கள் கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் உள்ள வார்டு, கிளை கழகம் ஆகியவற்றிலிருந்து இளைஞர்கள் சுமார் 5000 பேர் கலந்து கொள்ளும் வகையில் இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டத்தை சிறப்பான முறையில் நடத்திட வேண்டும்,

வரும் டிச.17ஆம் தேதி சேலத்தில் திமுக இளைஞரணி இரண்டாவது மாநில மாநாடு பிரம்மாண்டமாக நடைபெற உள்ளது. சேலத்தில் நடைபெறும் மாநில மாநாடு தொடர்பாக விரைவில் செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற உள்ளது. அதில், திமுக மாநில இளைஞரணி செயலாளரும், விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் மேம்பாட்டு துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் பங்கேற்க உள்ளார். கழக இளைஞர் அணி 2 வது மாநில மாநாட்டிற்கு நாமக்கல் கிழக்கு மாவட்டத்திலிருந்து தொகுதிக்கு 10000 கழக இளைஞர் அணியினர் வெண் சீருடையில் திரளாக கலந்து கொள்ள வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் ப.ராணி, சி. ஆனந்தகுமார், மாவட்ட பொருளாளர் ஏ.கே.பாலச்சந்திரன், மாவட்ட துணை செயலாளர் நலங்கிள்ளி, தலைமை செயற்குழு உறுப்பினர் டாக்டர் மாயவன், நகர செயலாளர்கள் என்.ஆர். சங்கர், ராணா ஆனந்த், சிவக்குமார், பூபதி, ஒன்றிய கழக செயலாளர்கள் அ.அசோக் குமார், கே.பி.இராமசுவாமி, ஆர்.எம்.துரைசாமி, பெ.நவலடி, கே.பி.ஜெகநாதன், பாலசுப்பிரமணியன், எம்.பி.கௌதம், ஜெயபிரகாஷ், செந்தில் முருகன், நாமக்கல் நகர மன்ற தலைவர் து.கலாநிதி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சி.விஸ்வநாத் மற்றும் பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், அனைத்து சார்பு அணி அமைப்பாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## ஒருங்கிணைந்த தென்காசி மாவட்டத்திற்கு இன்று வருகை தரும்

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

### தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் - வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. அறிக்கை!

தென்காசி, செப். 4 -

ஒருங்கிணைந்த தென்காசி மாவட்டம் சார்பில் தென்காசி இசக்கி மஹால் வளாகத்தில் நாளை (05.09.2023 - செவ்வாய்க் கிழமை) நடைபெறும் கழக முன்னோடி களுக்கு பொற்கிழி வழங்கும் நிகழ்வு, 1500 கழக உடன்பிறப்புகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வு மற்றும் கழக இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டத்தில் கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்பு திட்டம் செயலாக்கத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்ற உள்ளார்கள்.

இக்கூட்டத்தில் கழக இளைஞர் அணி நிர்வாகிகள் மற்றும் இளைஞர்கள் வெள்ளை நிற ஆடை அணிந்து பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறும், முன்னதாக தென்காசிக்கு இன்று 4 ம் தேதி இரவு 7 மணி அளவில் வருவதை முன்னிட்டு தெற்கு மாவட்ட எல்லையான ஆலங்குளத்தில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.

இதில் கழகத்தினர் திரளாக கலந்து கொண்டு உற்சாகமான வரவேற்பு அளிக்க வேண்டும். என தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே. ஜெயபாலன், வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ ஆகியோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்களது அறிக்கை வருமாறு.

நாளை (05.09.2023- செவ்வாய்க்கிழமை) காலை 10 மணி அளவில் தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் ஆய்வுக் கூட்டத்தில் கழக இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று சிறப்பிக்க உள்ளார்கள்.





தென்காசி இசக்கி மஹால் வளாகத்தில் கழக இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்கும் விழா நிகழ்வு முன்னிட்டு பிரம்மாண்டமான ஏற்பாடுகள் நடைபெற்று வருகிறது.

அதன்படி தென்காசி இசக்கி மஹால் வளாகத்தில் மாலை 4 மணிக்கு நடைபெறும் கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி மற்றும் ரூபாய் 10,000 ம் ஊக்கத் தொகை வழங்கும் நிகழ்வு, கழக உடன்பிறப்புகள் 1500 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வு ஆகியவற்றிலும் அதனைத் தொடர்ந்து கழக இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டத்திலும் கழக இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று சிறப்புரையாற்றுகிறார்கள்.

இந்நிகழ்வில் கழக இளைஞர் அணி நிர்வாகிகள் மற்றும் இளைஞர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், ஊராட்சி வார்டு, கிளை கழக இளைஞரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக இளைஞரணியினர் வெண் சீருடையில் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கிறோம்.

தென்காசி மாவட்டத்திற்கு முதன்முறையாக கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வருகையை முன்னிட்டு மாவட்டம் முழுவதும் கழக நிர்வாகிகள், இளைஞர் அணி நிர்வாகிகள், கழக கொடியை கையில் ஏந்தி உற்சாகமான வரவேற்பு அளிக்க வேண்டும்.

மேலும் தென்காசி சிவந்தி நகரில் தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தை கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்து 75 அடி உயர கம்பத்தில் கழக கொடியை ஏற்றி வைத்து சிறப்பிக்கிறார்கள்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## சீர்காழியில் விஷ வண்டுகள் தாக்கி

# உயிரிழந்தவர் குடும்பத்திற்கு நிதி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, செப். 4 -

மயிலாடுதுறை மாவட்டத்தில் விஷ வண்டுகள் தாக்கி உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி வட்டம், 80 ராதா நல்லூர் கிராமம், அய்யனார் கோவில் தெருவைச் சேர்ந்த திரு. வீரமணி த/பெ. செண்டாய் என்பவர் கடந்த 31.08.2023 அன்று திருக்கடையூர் கிராமத்தில் மாங்காய் பறிக்கும் வேலை செய்து கொண்டிருக்கும் போது கதண்டு என்கிற விஷ வண்டுகள் தாக்கி காயமடைந்து திருக்கடையூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் முதலுதவி செய்யப்பட்டு மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

அங்கு சிகிச்சை பலனின்றி அவர் நேற்று (29 2023) காலை உயிரிழந்தார் என்ற செய்தியினைக் கேட்டு மிகுந்த வருத்தமுற்றேன்.

உயிரிழந்த வீரமணி அவர்களின் மனைவி மற்றும் இரண்டு குழந்தைகளுக்கும், உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு இரண்டு இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கிட உத்திரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.



நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் நாமக்கல் திருச்சி சாலையில் உள்ள நளா ஹோட்டலில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தலைமை தாங்கி, கூட்டப் பொருள் குறித்து விளக்கம் அளித்தார். கூட்டத்தில் வனத்துறை அமைச்சர் மா.மதிவேந்தன், தீர்மானக் குழு செயலாளர் பார். இளங்கோவன், சட்டப்பேரவை உறுப்பினர்கள் பெ.ராமலிங்கம், கே.பொன்னுசாமி, மாவட்ட அவைத் தலைவர் மணிமாறன், முன்னாள் எம்.பி. பி.ஆர். சுந்தரம் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணி அமைப்பாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# ஒழுங்கு நடவடிக்கை!

### தலைமைக் கழக அறிவிப்பு

புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாவட்ட கலை, இலக்கியப் பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் வடவாளம் க.செ.மணிமாறன், மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் மு.க.திருமுருகன் ஆகியோர் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டதால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள் : 02-09-2023.

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

# தமிழ்நாட்டில் புயல் அபாயம் குறித்த விழிப்புணர்வு ஒத்திகை!

## அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் ஆய்வு!

சென்னை, செப்.3-

தமிழ்நாடு மாவட்டங்களில் புயல் அபாயம் குறித்த விழிப்புணர்வு மற்றும் ஒத்திகை பயிற்சியை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர். ராமச்சந்திரன் ஆய்வு செய்தார்.

தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் மற்றும் தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை ஆணையம் இணைந்து மாவட்ட ஆட்சியர், பிற துறை அலுவலர்கள் மற்றும் பொது மக்களுக்கான புயல் அபாயம் குறித்த விழிப்புணர்வு மற்றும் ஒத்திகை பயிற்சி நேற்று முன்தினம் (02.09.2023) தமிழகத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியிலும், செங்கல்பட்டு, திருவள்ளூர், கடலூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களிலும் நடத்தப்பட்டது.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் மாநில அவசரகால கட்டுப்பாட்டு மையத்தில் புயல் தொடர்பான ஒத்திகை பயிற்சியில் கலந்து கொண்டு, புயலின் தாக்கத்திற்கு முன்னர் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அனைத்து துறை அலுவலர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென அறிவுரை வழங்கினார்கள்.

இந்த ஒத்திகை பயிற்சியின் போது, காலை 9.00 மணிக்கு மாநில அவசரகால கட்டுப்பாட்டு மையத்திலிருந்து பெருநகர சென்னை மாநகராட்சி, செங்கல்பட்டு, திருவள்ளூர், கடலூர், நாகப்பட்டினம் மற்றும் மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களுக்கு VHF தொலைத் தொடர்பு மற்றும் முன்னெச்சரிக்கைக் கருவிகள் மூலமாக புயல் அபாய எச்சரிக்கை வழங்கப் பட்டது. மாவட்ட அவசரகால கட்டுப் பாட்டு மையத்திலிருந்து தொடர்புடைய துறை அலுவலர்களுக்கு தகவல் தெரிவிக் கப்பட்டு, மீட்பு படையின் உதவியுடன் மாவட்ட நிருவாகம் ஒருங்கிணைந்து பாதிப்பிற்கு உள்ளாகக் கூடிய பகுதிகளில் வசிக்கும் மக்களை முன்கூட்டியே நிவாரண முகாம்களில் தங்கவைத்து அவர்களுக்கு தேவையான உணவு, பாதுகாப்பான குடிநீர் மற்றும் மருத்துவ வசதிகள் செய்து கொடுக்கப்பட்டது.

பின்னர், புயலின் காரணமாக பாதிப்பு ஏற்பட்ட இடங்களில் சிக்கிக் கொண்ட பொதுமக்கள் மீட்கப்பட்டு, அவர்களுக்கு முதலுதவி அளிக்கப் பட்டு அங்கு தயாராக இருந்த ஆம்புலன்ஸ் வாகனம் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப் பட்டனர்.

இந்த ஒத்திகை பயிற்சியின் மூலம் மாநில மற்றும் மாவட்ட அளவில் பேரிடர் காலங்களில் இணைந்து செயல்படும் முக்கிய துறைகள் மற்றும் பிற அரசு நிறுவனங்களின் தயார் நிலை மதிப்பீடு செய்யப்பட்டதோடு, பேரிடர் நிகழ்வு, மீட்பு அமைப்பின் செயல்பாடுகள், (Incident Response System) குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது.

இந்த ஒத்திகையின் போது, கூடுதல் தலைமைச் செயலர்/வருவாய் நிருவாக ஆணையர் எஸ்.கே.பிரபாகர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை செயலர் வி. ராஜாராமன், தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் கமாண் டென்ட் ஆதித்ய குமார், தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை இயக்குநர் சி.அ. ராமன், தேசிய பேரிடர் மீட்புப் படை, தமிழ்நாடு பேரிடர் படை, தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, முப்படையை சார்ந்த அலுவலர்களும் மற்றும் பேரிடர் மேலாண்மையில் பெரும் பங்கு வகிக்கும் முக்கிய துறைகளை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




## ஆதித்யா எல் 1:


# சுற்றுவட்டப்பாதை வெற்றிகரமாக உயர்த்தப்பட்டது!

பெங்களூரு, செப். 4 -

பிஎஸ்எல்வி சி57 ராக்கெட் மூலம் ஏவப்பட்ட ஆதித்யா எல்1 விண்கலம் நேற்று முன்தினம் புவி சுற்றுவட்டப்பாதையில் வெற்றிகரமாக நிலை நிறுத்தப்பட்டது.

இந்த விண்கலம் அடுத்தாண்டு ஜனவரி மாதம் 4ம் தேதி அதன் இலக்கை அடையும் என இஸ்ரோ தெரிவித்துள்ளது.

அதாவது, ஆதித்யா எல் 1 விண்கலம் சூரியனை ஆய்வு செய்வதற்கான லாக்ரேஞ்சு புள்ளி இருக்கும் இடத்திற்கு 4 மாத பயணத்திற்கு பின்னரே சென்று சேரும் என்றும் அந்த இடத்தில் இருந்து கிரகணங்கள் அல்லது மறைவுகளால் தடையின்றி தொடர்ந்து




சூரியனை கண்காணித்து ஆய்வு பணியில் இந்த விண்கலம் ஈடுபடும் என்றும் இஸ்ரோ தெரிவித்தது.

இந்நிலையில், ஆதித்யா எல் 1 விண்கலத்தின் சுற்றுவட்டப்பாதை வெற்றிகரமாக உயர்த்தப்பட்டது. அடுத்த சுற்றுவட்டப் பாதைக்கு உயர்த்தும் நடவடிக்கை வரும் 5ம் தேதி மேற்கொள்ளப்படும் என இஸ்ரோ அறிவித்துள்ளது.

ஆதித்யா எல் 1 விண்கலம் சிறப்பாக செயல்பட்டு வருவதாகவும் இஸ்ரோ அறிவித்துள்ளது.






**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி.**

# 33 திராவிட மாடல் அரசு





# பாடநூல்களுக்கு அப்பால்...

*பலருக்கும் புத்தகம் என்றால், அது பாடப் புத்தகம்தான். பாடப் புத்தகங்கள் ஒருவரை கல்வியில் தேர்ச்சி பெற வைக்கும். ஆனால், பாடப் புத்தகங்களைத் தாண்டியும் ஒருவர் மேற்கொள்ளும் வாசிப்புதான் அவருக்கு உண்மையான அறிவை வழங்கி, வாழ்க்கையில் தேர்ச்சி பெற வைக்கும்.*

*தமிழ்நாட்டில், பாடப் புத்தகங்களைப் பதிப்பிப்பதற்காகவே 1970-ஆம் ஆண்டு மார்ச் 4-ஆம் தேதி தொடங்கப்பட்டது, தமிழ்நாடு பாடநூல் நிறுவனம். பின்னர் 1993-இல் ‘தமிழ்நாடு பாடநூல் கழகம்’ என்றும், 2013-இல் ‘தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்’ என்றும் பெயர் மாற்றத்துக்கு உள்ளானது.*

*பெயர் மாற்றத்துக்கு உள்ளானதைத் தவிர, கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் அந்தக் கழகத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எதுவும் நடைபெறவில்லை. இந்நிலையில், 2021-இல் மே மாதம் நம் கழகத் தலைவர் முதலமைச்சர் தலைமையிலான **‘திராவிட மாடல் அரசு’** பொறுப்பேற்ற பிறகு, வியக்கத்தக்க மாற்றங்களும், விடியலுக்கான புதிய முன்னெடுப்புகளும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.*

*ஆம்... இதுவரை பாடநூல்களை மட்டுமே பதிப்பித்து வந்த பாடநூல் கழகம், இப்போது பாடநூல்களுக்கு அப்பாலும் நிறைய புத்தகங்களை அச்சிட்டு வருகிறது. கல்விப் பணிகளுடன் இப்போது இலக்கியப் பணிகளையும் அது மேற்கொண்டு வருகிறது.*

## திசைதோறும் திராவிடம்

*தமிழ்நாடு பாடநூல் கழகம் மேற்கொண்டு வரும் முக்கியமான வெளியீட்டுத் திட்டங்களில் முதன்மையானது **‘திசைதோறும் திராவிடம்’** திட்டம். 2021- ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையின் போது கல்வித்துறையால் முன்மொழியப்பட்ட இந்தத் திட்டத்தின் கீழ் தமிழர் பெருமையைப் பேசும் இலக்கியங்கள், சாகித்ய அகாடமி விருது பெற்ற எழுத்தாளர்களின் படைப்புகள் ஆகியவற்றை மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டு வருகின்றன.*

*குறிப்பாக, தொ.பரமசிவனின் **‘அறியப்படாத தமிழகம்’**, சிலப்பதிகாரம் ஆகியவை ஆங்கிலத்திலும், திருக்குறளுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் எழுதிய உரை தெலுங்கிலும், பூமணியின் **‘வெக்கை’** மலையாளத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.*



*மேலும், வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டைக் கொண்டாடும் வகையில், இந்த ஆண்டு **பழ.அதியமான் எழுதிய ‘வைக்கம் போராட்டம்’** எனும் ஆய்வு நூல், மலையாளத்தில் மொழி பெயர்க்கப்பட்டு, தமிழ்நாடு முதலமைச்சராலும், கேரள முதலமைச்சராலும் வெளியிடப்பட்டது.*

## முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டம்!

*‘பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்’ என்ற மகாகவி பாரதியாரின் கனவை நனவாக்கும் விதமாக இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.*

*கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது, 1970-களில் அறிவியல், மருத்துவம், பொறியியல், தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகள் சார்ந்த சுமார் 875 நூல்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டன. பல ஆண்டுகளுக்குப் பிறகு அந்தத் திட்டத்தை மீட்டெடுக்கும் வகையில், கடந்த ஆண்டு 45 துறைசார் நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டன.*

*இந்த ஆண்டு ஜனவரியில் நடைபெற்ற சென்னை சர்வதேசப் புத்தகத் திருவிழாவில், தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட 5 மருத்துவ நூல்களை முதலமைச்சர் வெளியிட்டார். அதைத் தொடர்ந்து, மேலும் 13 மருத்துவ நூல்கள் உட்பட சுமார் 80-க்கும் மேலான நூல்கள் இந்த ஆண்டு மொழிபெயர்க்கப்பட்டு வருகின்றன.*

## 21 மொழிகளில் பெரியார்

*இந்தியாவுக்காக தெற்கிலிருந்து நாம் பேச வேண்டிய நேரம் இது. அதற்கு முன்னோட்டமாக இந்திய மொழிகள் மட்டுமல்லாது, உலக மொழிகளும் என 21 மொழிகளில் தந்தை பெரியாரின் எழுத்துகள், பேச்சுகள், சிந்தனைகள் ஆகியவை மொழிபெயர்க்கப்பட்டு வருகின்றன.*

*மேலும், அறிஞர் பெரியசாமி தூரன் தலைமையில் 1960-களில் தயாரிக்கப்பட்ட ‘கலைக்களஞ்சியம்’ ஆவணப் பதிப்பாகக் கொண்டு வரப்பட்டுள்ளது. அதேபோல அவர் குழு தயாரித்த **‘குழந்தைகள் கலைக்களஞ்சியம்’** நூலும் ஆவணப் பதிப்பாகத் தயாராகி வருகிறது. அதை முதலமைச்சர் விரைவில் வெளியிட உள்ளார்.*

## இளந்தளிர் இலக்கியத் திட்டம்

*புத்தகங்கள் என்றால், பாடப் புத்தகங்கள்தான் என்று பலரும் நினைப்பது போல, பாடம் அல்லாத பிற நூல்கள் என்று சொன்னால், அவற்றைப் பெரியவர்களுக்கான விஷயங்களாகவே பார்க்கும் போக்கு பலரிடையே உள்ளது. அதற்கு மத்தியில், குறிப்பிடத்தகுந்த அளவுக்குத் தமிழில் சிறார் இலக்கியங்கள் வந்துகொண்டிருக்கின்றன.*

*தமிழ்நாடு பாடநூல் கழகம் இதிலும் தனி முத்திரை பதித்து வருகிறது. **‘இளந்தளிர் இலக்கியத் திட்டம்’** என்ற முன்னெடுப்பின் கீழ் குழந்தைகளை சமூகத்தில் நல்ல குடிமக்களாக்கும் பொருட்டுக் கதை வடிவில் நிறைய நூல்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. குழந்தைகளை மூன்று பருவத்தினராக வகைப்படுத்தி, அவர்களின் வயதுக்கு ஏற்றபடியான நூல்களை, பாடநூல் கழகம் வெளியிட்டுள்ளது. உதாரணத்துக்கு, **‘குட் டச், பேட் டச்’** என்பதை விளக்கும் **‘என்னைத் தொடாதே’**, மாற்றுத்திறனாளிகள், இட ஒதுக்கீடு போன்ற சமூக நீதியைக் கற்றுத் தரும் நூல்கள் ஆகியவை குழந்தைகள், ஆசிரியர்கள் ஆகியோரிடையே மட்டுமல்லாது பெற்றோர்கள் மத்தியிலும் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன.*

## சிறப்பு வெளியீடுகள்

*புத்தகங்கள் மட்டுமல்லாது வ.உ.சி.யின் 150-வது பிறந்த ஆண்டைச் சிறப்பிக்கும் வகையிலான இதழ், திராவிட மாடல் அரசின் சாதனைகளைப் பற்றிய வெளியீடுகள், ‘பொருநை’, ‘கீழடி’ அகழாய்வுகளின் அறிக்கைகள் போன்ற நிறைய சிறப்பு வெளியீடுகளையும் அவ்வப்போது பாடநூல் கழகம் வெளியிட்டு வருகிறது.*

*எல்லாவற்றுக்கும் மகுடம் சூட்டியதுபோல 2023 ஜனவரியில் முதலாவது ‘சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா’வை பொதுநூலகத் துறையோடு இணைந்து பாடநூல் கழகம் நடத்தியது. அதில் 30 நாடுகளிலிருந்து எழுத்தாளர்களும் பதிப்பாளர்களும் கலந்துகொண்டனர். 350-க்கும் மேற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.*

> ➢ தமிழ்ப் புனைவு, அபுனைவு இலக்கியப் படைப்புகள் சுமார் 50-க்கும் மேலானவை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.
>
> ➢ இலக்கிய மொழிபெயர்ப்புப் படைப்புகளை, பெங்குயின், ஆக்ஸ்போர்ட் யுனிவர்சிட்டி பிரஸ், ஹார்ப்பர் காலின்ஸ் உள்ளிட்ட ஆங்கிலப் பதிப்பகங்களுடன் இணைந்து பாடநூல் கழகம் வெளியிடுகிறது.
>
> ➢ மருத்துவ மொழிபெயர்ப்பு நூல்களை, அறிவியல் புத்தகங்களைப் பதிப்பிப்பதற்குப் பெயர் பெற்ற சர்வதேசப் பதிப்பகமான ’எல்ஸிவ்யர்’ மூலம் கொண்டு வருகின்றது பாடநூல் கழகம்.
>
> ➢ நாட்டுடைமையாக்கப்பட்ட எழுத்தாளர்களின் நூல்கள், நூற்றாண்டு காணும் எழுத்தாளர்களின் நூல்கள் ஆகியவற்றையும் பாடநூல் கழகம் பதிப்பிக்கிறது.

*அந்தப் பன்னாட்டுப் புத்தகத் திருவிழாவை ஏற்பாடு செய்யும் முன்பு கடந்த ஆண்டு அக்டோபரில் தமிழ்நாடு அரசு அதிகாரிகள் சிலர், ஜெர்மனி ஃப்ராங்க்ஃபர்ட்டில் நடைபெற்ற **‘உலகப் புத்தகத் திருவிழா’**வுக்குச் சென்று, இங்கும் அதுபோன்ற திருவிழாவை நடத்துவதற்கான அனுபவங்களைப் பெற்று வந்தார்கள். அதனைத் தொடர்ந்து இந்த ஆண்டு அக்டோபரில் ஃப்ராங்க்ஃபர்ட்டில் சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழாவின் சார்பாக, தமிழ்நாடு பாடநூல் கழகம் தனது வெளியீடுகளைக் காட்சிப்படுத்த இருக்கிறது.*

*அறிவை வளர்ப்பது மட்டுமல்ல... மனதைப் பண்படுத்துவதும்தான் சிறந்த மனிதர்களை உருவாக்கும். அதைத்தான் ‘திராவிட மாடல் அரசு’ பாடநூல் கழகம் வழியாகச் செய்துவருகிறது..!*

**...சாதனை தொடரும்**

## முதல்வர் கவனம் பெற்ற ஓவியம்!



**கா**லை உணவுத் திட்டம் பல வகைகளிலும், பல திசைகளிலும் பாராட்டுகளைப் பெற்று வருகிறது. அதன் பயனாளிகளான பள்ளிப் பிள்ளைகள் மனதிலும் மிகப்பெரும் மாற்றங்களை உருவாக்கியுள்ளது.

கற்றலில் மட்டுமல்ல, அவர்கள் ஆற்றலிலும் பாய்ச்சலை நிகழ்த்தி வருகிறது. அதை ஓவியமாக வரைந்துள்ளனர் கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி மாணவர்கள், காலை உணவுத் திட்டத்தினை முதல்வர் தொடங்கி வைத்த காட்சிகளைக் கரும்பலகையில் ஓவியமாக வரைந்துள்ளனர். அந்தப் படத்தினை முதல்வர் பார்வைக்கும் கொண்டு செல்ல வேண்டும் என விரும்பியுள்ளனர். அதேபோலவே அந்தப் புகைப்படம் சமூக வலைத்தளங்களில் பரவி, நமது முதல்வர் கவனத்துக்கும் வந்து பாராட்டுகளைத் தெரிவித்துள்ளார். காலை உணவுத் திட்டம் மிகப் பெரிய மாற்றங்களை நிகழ்த்தி வருவதை ஓர் ஓவியத்தின் பயணம் சொல்லிவிட்டது.

## :ப்ளாஷ்பேக்





தமிழருவி

### பணிக்குப் பாராட்டு!

**1996**-ஆம் ஆண்டு தேர்தல் பிரச்சாரத்துக்கு, திருச்சிக்கு வந்த தளபதி அவர்கள் திருச்சி, சங்கம் ஹோட்டலில் தங்கி இருந்தார். அப்போது, அவரைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. நான் கழகத்துக்கு ஆற்றும் பணியினைப் பாராட்டும் வகையில், அய்யா ஆதிமூலம், அண்ணன் அன்பில் பொய்யாமொழி, தி.ப.மாயவன், திருச்சி சிவா ஆகியோர் என்னை தளபதியாரிடம் அறிமுகப்படுத்தி வைத்தனர். அவர் கழகத்துக்காக மேலும் பணியாற்ற வேண்டும் என்று என்னைப் பாராட்டினார். 72 வயது ஆகியும் என் இல்லத்தில் இந்தப் புகைப்படத்தைப் பார்க்கின்ற போதெல்லாம் உற்சாகமாக 27 வயது இளைஞர் போல் கழகப் பணியாற்றிட உந்துதல் தருகிறது.

**-சி.தமிழருவி,**
**ஒன்றிய இலக்கிய அணி துணை அமைப்பாளர், அந்தநல்லூர் ஒன்றியம், திருச்சி மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண் டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033– 24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### தூக்குமேடை நாடகம்

**1952-ஆம் ஆண்டு, தஞ்சை மாவட்டத்தில் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ கழகத்தின் சார்பில் நிதி திரட்டப்பட்டது. அந்தப் பணிக்குப் பொறுப்பேற்றவர் கலைஞர். அந்த முயற்சிக்காக கலைஞர் எழுதிய ‘தூக்குமேடை’ நாடகம் பல இடங்களில் நடத்தப்பட்டு நிதி திரட்டப்பட்டது. சங்கரன் கோயிலில் நாடகத்துக்கு ஏற்பாடு செய்தவர், வசூலான பணத்தை எடுத்துக்கொண்டு சென்றுவிட்டார். சென்னை திரும்ப பணமில்லாமல் நின்ற கலைஞர், சிவாஜிகணேசன், சி.வி.எம்.அண்ணாமலை உள்ளிட்ட குழுவுக்கு, தூத்துக்குடியில் கே.வி.கே.சாமி உள்ளிட்ட தோழர்கள் உதவினர்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 230




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.